திருமுறை, திவ்வியப்பிரபந்தத்
திருப்பாடல் திரட்டு

வெளியீடு :

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை
சென்னை

௨

"தமிழ் நாடு தெய்விகப் பேரவையின்" முதல் பெருந் தலைமை தாங்கி வீற்றிருந்தருளிச் சிறப்புற நடாத்தியருளிய திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன இருபத்தைந்தாவது மகாசந்நிதானம் கயிலைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருக்காசியின் கண் பரிபூரணம் எய்தியருளியதன் நினைவாக இது வெளியிடப் பெறுகின்றது.

உ

திருமுறை, திவ்யப்பிரபந்த
திருப்பாடல் திரட்டு

வெளியீடு

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9. மகாராஜா சூரியராவ் சாலை
சென்னை-18

வெளியீடு - எண் - 18

1971 - செப்டெம்பர்

ஒரு லட்சம் பிரதிகள்

பாரி அச்சகம், 127, பிராட்வே, சென்னை-1

5-2

உ

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
சென்னை-18.

முன்னுரை

இந்து சமய மக்கள் தங்கள் மதத்தின் பெருமையை உணரவும், பழைமை மிக்க இந்து சமய நூல்களில் கூறப்பட்டுள்ள அருள், அறநெறிகளின்படி தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இன்பமாய் அதன்படி செயல்படவும் துணை புரியும் பொருட்டு தமிழகத்திருமடங்களின் மகாசந்நிதானங்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பட்ட நிறுவனமே **"தமிழ்நாடு தெய்விகப் பேரவை"**

பள்ளிக்கூடங்களில் பயிலும் இளம் பிள்ளைகள் நற்பயனடைய வேண்டும் என்பதற்காக நம்முடைய சிறந்த சமய இலக்கியங்களிலிருந்து, நல்ல கருத்துச் செறிவுள்ள திருப்பாடல்கள் சிலவற்றைத் திரட்டிச் சிறு நூலாக வெளியிட தமிழ்நாடு தெய்விகப் பேரவை கருதியது. இவ்வாறு பலரும் பயன்பெறும் வண்ணம் இந்நூல் வெளியீடு எண் 18 ஆக வெளியிடப் பெறுகிறது.

இவ்வரிய நல்ல வாய்ப்பினை, நமது இளம் மாணவர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள விரைந்து முன்வருவார்கள் என நம்புகிறேன். இறையருள் துணை செய்வதாகுக!

சென்னை-18.
3-12-71.

அ. நாராயணசுவாமி
செயலாளர்.

உ

அணிந்துரை.

திரு. கே. எஸ். நரசிம்மன், பி. ஏ. பி. எல், ஐ. ஏ. எஸ்,
ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-34.

இளமைப்பருவம் மாசு மறுவற்ற பருவம்; அதுமிக்க பரிசுத்தமும் புனிதத்தன்மையும் வாய்ந்தது. அப்பருவத்திலேயே ஒருவரது வாழ்க்கை உருவாகின்றது; பிற்கால வாழ்க்கையின் நெறியும் இயல்பும், அதனைப் பொறுத்தே அமைகின்றன. அதுபற்றியே ''இளமையிற் கல்'' ''இளமையிற்கல்வி சிலையில் எழுத்து'' ''விளையும்பயிர் முளையில் தெரியும்'' என்னும் பழமொழிகள் வழங்கிவருகின்றன.

ஒரு நாட்டின் ஒப்புயர்வற்ற மதிப்புமிக்க சிறந்த நல்ல செல்வம், இளம் பிள்ளைகளே எனலாம். அவர்களே நமது வருங்காலப் பெரும் தலைவர்களும் ஆவர். அத்தகைய சிறப்புமிக்க பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு, அவர்களுடைய இளமைப் பருவத்திலேயே, கல்வியையும் நல்லொழுக்கத்தையும், பக்தியுணர்வையும் போதித்து வளரச் செய்து வந்தால், அஃது அவர்களுக்குப் பிற்கால வாழ்க்கையிற் பெரிதும் பயன்படுவதுடன், நாட்டிற்கும் நலம் பல விளைவிக்கும்.

ஆதலின் பள்ளிக்கூடங்களில் பயிலும் இளம் பிள்ளைகளுக்கு, நம்முடைய சிறந்த சமய இலக்கியங்களிலிருந்து, நல்ல கருத்துச் செறிவுள்ள பாடல்கள் சிலவற்றைத் திரட்டிச் சிறு நூலாக வெளியிட்டு, அவற்றை அவர்கள் கற்றுப் பயனடையும்படி செய்தல் வேண்டும் எனத் தமிழ்நாடு தெய்விகப் பேரவை கருதியது.

இக்கருத்தினையுட்கொண்டே, ''திருமுறைத் திரட்டு'' ''திவ்வியப் பிரபந்தத்திரட்டு'' என்னும் இந் நூல்கள் வெளியிடப்பெறுகின்றன. இவற்றைப் பயில்வதன் மூலம், நம் இளைஞர்கள் மேலும் மிகுந்த ஊக்கமும் உணர்வும் எய்தி, இவற்றின் விரிவான பல நூல்களைப் பயின்று பயன் அடைய முற்படுவார்கள் என்பது திண்ணம்.

இச்சிறிய நூலில் தொகுத்தளிக்கப்பெற்றுள்ள பாடல்களை, நன்கு கற்றுத் தேர்ச்சிபெறும் மாணவர்களுள் ஒவ்வொருவருக்கும், அவர்கள் எத்தனை பேர் முன் வந்தாலும் அவ்வளவு பேருக்கும், தனித்தனியே புத்தகப் பரிசுகள், தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சார்பில் வழங்கப்படும்.

இவ்வரிய நல்ல வாய்ப்பினை, நமது இளம் மாணவர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள விரைந்து முன்வருவார்கள் என நம்புகின்றேன். இறையருள் துணை செய்வதாகுக!

திருமுறைத் திரட்டு

(பகுதி ஒன்று)

திருஞானசம்பந்தர்

சோழ நாட்டில், சீர்காழியில், அந்தணர் குலத்தில், கவுணியர் கோத்திரத்தில் தோன்றியவர். தந்தையார் சிவபாத இருதயர். தாயார் பகவதி அம்மையார். மூவாண் டில் பிரமதீர்த்தக் கரையில், தோணியப்பரால் அம்பிகை யின் ஞானப்பால் ஊட்டுவிக்கப்பெற்றார். 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார்.

'மடையில் வாளை' என்னும் பதிகம் பாடித் திருக் கோலக்காவில் பொற்றாளம் பெற்றார். திருப்பாச்சிலாச்சிரா மத்தில் கொல்லிமழவன் என்னும் குறுநில மன்னனின் மகளைப் பற்றியிருந்த முயலக நோயைத் தீர்த்தார். 'அவ் வினைக்கு இவ்வினையாம்' எனத் தொடங்கும் திருநீல கண்டப் பதிகம் பாடிக், கொடி மாடச் செங்குன்றூர் என் னும் தலத்தில், அடியவர்களுக்கு வந்த நளிர்சுர நோயைப் போக்கியருளினார். திருநெல்வாயில் அரத்துறையில் இறை வனின் அருளால் முத்துச் சிவிகையும், திருப்பட்டீச்சுரத் தில் முத்துப் பந்தரும் பெற்றார். 'இடரினும் தளரினும்' என்னும் பதிகம் பாடித் திருவாவடுதுறையில், தம் தந்தை யார் வேள்வி செய்தற் பொருட்டு, உலவாப் பொற்கிழி அளிக்கப் பெற்றார்.

தருமபுரம் என்னும் தலத்தில் 'மாதர்மடப்பிடி' எனத் தொடங்கும் யாழ்மூரிப்பதிகம் பாடினார். திருமருகலில் அரவுதீண்டி இறந்த வணிகனைச், 'சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்' எனத் தொடங்கும் பதிகம் பாடி உயிர் பெற்று எழச் செய்தார். திருவீழிமிழலையில் இறைவன்பாற் படிக்காசு பெற்றார், அக்காசு வாசிதீரப் பாடியருளினார். பின்பு வாசி தீர்ந்த காசு பெற்றுப் பஞ் சத்தால் வருந்திய மக்களுக்கு நாள்தோறும் இருவேளையும் உணவளித்துப் பஞ்சம் போக்கினார். திருமறைக் காட்டில் அப்பர் திறக்கப்பாடிய திருக்கதவத்தை அடைப்பித்தார்.

குலச்சிறையார் மங்கையர்க்கரசியார் என்னும் இருவரின் வேண்டுகோட்கு இணங்கிப் பாண்டிய நாடு சென்றார். அப்போது நாளும் கோளும் நலமாக இல்லை என்று அப்பர் தடுக்க 'வேயுறு தோளிபங்கன்' என்னும் கோளறு பதிகம் பாடினார். அனல் வாதமும், புனல் வாதமும் புரிந்து, சமணர்களை வென்றார். 'மந்திரமாவது நீறு' என்னும் திருநீற்றுப் பதிகம்பாடிப் பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்து, அவனது உடலின் கூனையும், உள்ளத்தின் கூனையும் போக்கி 'நின்ற சீர் நெடுமாறன்' என ஆக்கினார். போதிமங்கையில் தமது அடியவர்களுள் ஒருவர் ஆகிய சம்பந்த சரணாலயர் என்பவரைக் கொண்டு புத்தர்களை வாதில் வென்றார். திருமயிலையில் 'மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலை' என்னும் பதிகம்பாடி, பாம்பு கடித்து இறந்த சிவநேசச்செட்டியாரின் மகளை உயிர்பெற்று எழச்செய்து எலும்பைப் பெண்ணுக்குதல் அல்லது அங்கம் பூம்பாவையாக்குதல் ஆகிய அற்புதம் நிகத்தினார். சீர்காழிக்கு அருகில் உள்ள, ஆச்சாபுரம் என வழங்கும் திருநல்லூர்ப் பெருமணத்தில், திருமணம் செய்து கொண்டு, 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்னும் நமச்சிவாயப் பதிகம் பாடித் தம் திருமணத்திற்கு வந்திருந்த எல்லோருடனும், வைகாசி மூல நன்னாளில் இறைவன் திருவருள் ஒளியில் கலந்தார். திருஞானசம்பந்தர், 'மூல இலக்கியம்' என்று சேக்கிழார் போற்றும் பற்பல அரிய திருப்பதிகங்களைப் பாடியுள்ளார். அவைகள் அனைத்தும் சைவத் திருமுறைகளின் வரிசையில், முதல் மூன்று திருமுறைகளாக அமைக்கப்பெற்றுள்ளன.

திருஞான சம்பந்தர் தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறி ஓர்தூ வெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி என்உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்துஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன்அன்றே. 1

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தன(து) அடி வழிபடும் அவர் இடர்
கடிகண பதிவர அருளினன்; மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே. 2

வம்மின் அடியீர் நாள்மலர் இட்டுத் தொழுது உய்ய
உம் அன்பினோடு எம் அன்பு செய்து ஈசன் உறை கோயில்
மும்மென்று இசைமுரல் வண்டுகள் கெண்டித்
திசையெங்கும்
விம்மும் பொழில்சூழ் தண் வயல் வீழிம் மிழலையே. 3

அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும்
அஃது அறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனம் அன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும்
நாம் அடியோம்
செய்வினை வந்து எமைத் தீண்டப் பெறு திருநீலகண்டம். 4

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்றுனைப் பேசின்அல்லால்
குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினல் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. 5

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே! அரன்நாமம்
கேளாய், நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறம்அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலிஎம் பெருமானே. 6

நன்றுடை யானைத் தியநிலானை நரைவெள்ளே(று)
ஒன்றுடை யானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடை யாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே. 7

நீநாளும் நன்னெஞ்சே! நினைகண்டாய். யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும்? சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே. 8

கண்காட்டும் நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே

ஈறாய் முதல் ஒன்றாய் இருபெண் ஆண் குணம் மூன்றாய்
மாறா மறை நான்காய் வருபூதம் அவை ஐந்தாய்
ஆறு ஆர்சுவை ஏழ் ஓசையோடு எட்டுத்திசை தானாய்
வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம்மிழலையே. 10

நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல்மேவி அருமறை சொன்ன(து) என்னே!
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. 11

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையக மும்துயர் தீர்கவே. 12

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே. 13

குற்றம்நீ குணங்கள்நீ கூடல் ஆலவாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்து இலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ அருத்தம் இன்பம் என்றுஇவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதுஎன் முகம்மனே? 14

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே. 15

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்; வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை;
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே. 16

நல்லவர் தீயவர் எனாது, நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ;
கொல்ல நமன்தமர் கொண்டு போம்இடத்(து)
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே. 17

சலமிலன், சங்கரன், சார்ந்த வர்க்கலால்
நலமிலன்; நாடொறும் நல்கு வான், நலன்,
குலமில ராகிலும் குலத்துக்(கு) ஏற்பதோர்
நலம்மிகக் கொடுப்பது நமச்சி வாயவே. 18

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்(து)
என் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய்புதன் வியாழன்வெள்ளி
சனிபாம்(பு) இரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 19

முற்றலாமையிள நாகமோடு ஏன
முளைக் கொம்புஅவைபூண்டு
வற்றல் ஓடு கலனுப் பலிதேர்ந்து எனது
உள்ளம் கவர்கள்வன்
கற்றல் கேட்டல் உடையார் பெரியார்
கழல் கையால் தொழுது ஏத்தப்
பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவனன்றே 20

சமர சூரபன் மாவைத் தடிந்தவேற்
குமரன் தாதைநற் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக்(கு) அன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம(து) ஆளுடை யார்களே. 21

திருந்த லார்புரந் தீயெழச் செறுவன;
விறலின்கண் அடியாரைப்
பரிந்து காப்பன; பத்தியில் வருவன;
மத்தமாம் பிணிநோய்க்கு
மருந்தும் ஆவன; மந்திரம் ஆவன;
வலஞ்சுழி இடமாக
இருந்த நாயகன் இமையவர் ஏத்திய
இணையடித் தலந்தானே. 22

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே. 23

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 24

௨

திருநாவுக்கரசர்

சைவ சமய ஆசிரியர்களாகிய நால்வர்களில் ஒருவர். பக்தியிற்கனிந்தவர்; ஞானம் பழுத்தவர். அப்பர், வாகீசர், சொல்லரசர், தாண்டகவேந்தர் முதலிய பல பெயர்களால் வழங்கப்பெறுபவர். நடுநாடு என்னும் திருமுனைப்பாடி நாட்டில், சிவம் பெருக்கும் திருவாமூரில், வேளாளர் குலத்தில், குறுக்கையர் குடியில் தோன்றியவர். தந்தை புகழனார், தாய் மாதினியார், தமக்கை திலகவதியார். இளமை இயற்பெயர் மருள் நீக்கியார். இளமையில் சமண சமயம் சார்ந்து, கலை நூல் பலவும் கற்றுத் தேர்ந்தவர். தரும சேனர் என்னும் பட்டம் பெற்று, வித்தகராச் சமண் சமயத் தலைமையில் மேம்பட்டவர். தமக்கையார் ஆகிய திலகவதியார் பலகாலும் பணிந்து விண்ணப்பித்துக்கொண்டபடி, திருவதிகை வீரட்டானேசுவரர், இவரைச் சூலை நோய் தந்து வருத்தித் தடுத்து ஆட்கொண்டார். தமது சூலை நோய் தீர, இவர் ''கூற்றாயினவாறு விலக்ககிலீர்'' எனத் தொடரும் திருப்பதிகம் பாடினார். அது கேட்டு மகிழ்ந்த திருவதிகை வீரட்டானேசுவரர், இவருக்குத் திருநாவுக்கரசர் என்னும் சிறப்புப் பெயரை அளித்தார். இவ்வாறு இவர் சமண் சமயம் விடுத்துச் சைவ சமயம் சார்ந்தமைக்காக வெகுண்டு, சமண மன்னனாகிய மகேந்திரவர்ம பல்லவன் (கி. பி 600-630) இவரை நீற்றறையில் இட்டும், நஞ்சு கொடுத்தும், களிற்றை ஏவியும், கல்லொடு சேர்த்துக் கடலில் தள்ளியும், கொல்ல முயன்றான். எவ்வளவு முயன்றும் இவரைக் கொல்ல முடியாமையால் அப்பல்லவ அரசன் இவர்தம் தெய்விகச் சிறப்பை உணர்ந்து இவருக்கு உண்மை அடியவனாக மாறி அன்புபூண்டு ஒழுகி உய்தி பெற்றான். தமிழகத்தில் முதன் முதலாகச் சிறப்பக்-

கலைத்திறன் சிறந்த குடவரைக் கோயில்களைப் பல்லாவரம், மாமண்டூர், சீயமங்கலம், திருவல்லம், தளவானூர், திருக்கழுக்குன்றம், திருச்சிராப்பள்ளி முதலிய பல இடங்களில், மகேந்திர வர்மன்தான் அமைத்தான். அதற்குரிய உணர்ச்சியையும் ஊக்கத்தையும் அம்மன்னனுக்கு அளித்து உதவியவர் திருநாவுக்கரசரே யாவர். பல்லவ மன்னனைச் சைவனாக மாறும்படி செய்த இவர்தம் செயல், வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு மாபெரும் புரட்சி நிகழ்ச்சியாகும். சைவமறு மலர்ச்சிக்கும், தமிழ்க்கலை நாகரிகப் பண்பாடுகளின் பெரு வளர்ச்சிக்கும் இவர் ஆற்றிய தொண்டுகள் அளவிடற்பாலன அல்ல. ''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'' என்று வீர முழக்கம் செய்த மாபெரும் சிவஞானி இவர்!

பல்லவ மன்னன் நீற்றறையில் இட்டு வருத்திய போது, 'மாசில் வீணையும்' என்னும் பதிகம்பாடி இவர் யாதொரு தீங்கும் இன்றி இருந்தார். ''அஞ்சுவது யாதொன்றும் இல்லை: அஞ்ச வருவதும் இல்லை'' என்னும் ஈற்றடியைப் பாடல்தோறும் கொண்ட 'சுண்ணவெண் சந்தனச் சாந்து' என்னும் பதிகம்பாடி, தம்மை எதிர்த்துக் கொல்ல வந்த யானையே தம்மை வலம் வந்து பணிந்து செல்லும்படி செய்தார். கற்றுணைப் பூட்டிக் கடலில் தள்ளிய போது, ''சொற்றுணை வேதியன்'' என்னும் பதிகம் பாடிக் கல்லே புணையாக மிதக்கக் கரையேறி வந்தார். திருப்பெண்ணாகடம் என்னும் தலத்தில், தூங்கானைமாடம் என்னும் கோயிலில், இறைவனைத் துதித்து, 'பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம்' என்னும் பதிகம் பாடி, இடபக்குறியும் சூலக் குறியும் இறைவனாற் பொறிக்கப் பெற்றார்.

சீர்காழி திருவீழிமிழலை திருப்புகலூர், திருப்பூந்துருத்தி முதலிய இடங்களிற் சம்பந்தரைச் சந்தித்து நட்புறவு கொண்டு, அவரால் ''அப்பர்'' என்று பாராட்டப்பெற்றார் திங்களூரில் இருந்த அப்பூதியடிகள் என்னும் அந்தணரின் மகனாகிய மூத்த திருநாவுக்கரசு, பாம்பு கடித்து இறந்த

பொழுது, ''ஒன்று கொலாம்'' என்னும் பதிகம் பாடி உயிர் பெற்றெழச் செய்தார். வேதங்கள் பூசித்து மூடிச் சென்ற திருமறைக் காட்டுக் கோயிலின் திருக்கதவைத், திருஞானசம்பந்தர் விரும்பியபடி, ''பண்ணின்நேர் மொழி யாள்'' என்னும் பதிகம்பாடித் திறப்பித்தார். பழையாறை வடதளியில் சமணர்கள் மறைத்து வைத்திருந்த சிவலிங் கத்தைத் ''தலையெலாம் பறிக்கும் சமண்'' என்னும் பதிகம் பாடி, உண்ணாவிரதமும் சத்தியாக்கிரகமும் கடைப் பிடித்து, வெளிப்படுத்தியருளினார்.

திருக்கயிலைக் காட்சியைக் காண வடநாடுகள் பல கடந்து சென்றார். பின்னர் இறைவன் பணித்தபடி இமயச் சாரலில் இருந்த ஒரு பொய்கையில் மூழ்கித் திருவையாற் றுக் குளத்தினின்றும் எழுந்து, எப்பொருளும் சத்தியும் சிவமுமாக விளங்கும் திருக்கயிலைக் காட்சியைத் தரிசிக்கப் பெற்றார். திருப்பூந்துருத்தியில் திருமடம் ஒன்று அமைத் துச் சிலகாலம் தங்கியிருந்தார்.

பின்னர்த் திருப்புகலூர் சென்று, தேவமாதர்கள் வந்து மயக்க மயங்காமலும், நவமணித்திரள்கள் குவிந்திருக்கக் கண்டு அவற்றை வெறும் பரற்கற்கள் போலவே மதித்து உழவாரப்படையில் ஏந்தித் தூரத்தே வீசியும், பற்றற்ற மேலான பக்தி நிலையில் ஒழுகி, ஒரு சித்திரைச் சதயத் திருநாளில் ''எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனே'' என்னும் பதிகம்பாடி, இறைவனோடு இரண்டறக் கலந் தார்.

இவர் பாடிய பாடல்கள் திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்பனவாகும், இவைகள் நான்கு, ஐந்து, ஆறும் திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றுள்ளன.

திருநாவுக்கரசர் தேவாரம்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா! உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தரல் வேண்டும்;இவ் வையகத்தே
தொழுவார்க்(கு) இரங்கி இருந்தருள் செய்பா திரிப்புலி
-யூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த
தீவண்ணனே. 25

சிந்திப்ப அரியன; சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன; முத்தி கொடுப்பன; மொய்த்து
இருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன; பாம்புசுற்றி
அந்திப் பிறை அணிந்து ஆடும் ஐயாறன் அடித்தலமே. 26

வாய்த்தது நந்தமக்கு ஈதுஓர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசுபதம் அருள் செய்தவன் பத்தருள்ளீர்
சேர்த்தன்று முப்புரம் தீவளைத்தான் தில்லை அம்பலத்துக்
கூத்தனுக்கு ஆட்பட்டு இருப்பதன்றோ நந்தங் கூழைமையே.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டி ஓர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே 28

கூற்றாயின வாறு விலக்ககி லீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே, 29

கோவாய் முடுகி அடுதிறற் கூற்றம் குமைப்பதன்முன்
பூவார் அடிச்சுவ(டு) என்மேற் பொறித்துவை; போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண்டாய்: முழங்குந் தழற்கைத்
தேவா, திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே. 30

தன்னைச் சரண்என்று தாளடைந்தேன்; தன் அடியடையப்
புன்னைப் பொழிற்புக லூர்அண்ணல் செய்வன
கேண்மின்களோ;
என்னைப் பிறப்பறுத்(து)என்வினை கட்டறுத்(து)ஏழ்நரகத்து
என்னைக் கிடக்கலொட்டான்சிவ லோகத்(து) இருத்திடுமே

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை
வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும்
நீரைப் பாய்ச்சித்
தம்மையுள் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையும் அன்றே 32

அங்கத்தை மண்ணுக்(கு) ஆக்கி, ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன்; பரமா நின்னைச்;
சங்கொத்த மேனிச் செல்வா! சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்றாய்? என்ற போதால், ஆ! இங்குற்றேன்; என்
கண்டாயே. 33

பாலனாய்க் கழிந்த நாளும், பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும், மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும், குறிக்கோள்இலாது கெட்டேன்;
சேலுலாம் பழன வேலித் திருக்கொண் டீச்சரத்து ளானே.

கருவாய்க் கிடந்துஉன் கழலே நினையுங் கருத்துடையேன்;
உருவாய்த் தெரிந்துஉன்றன் நாமம் பயின்றேன்; உனதருளால்
இருவாய்ப் பொலியச் சிவாய நமஎன்று நீறணிந்தேன்;
தருவாய் சிவகதி நீ,பாதி ரிப்புலி யூர்அரனே 35

துறக்கப் படாத வுடலைத் துறந்து,வெந் தூதுவரோ(டு)
இறப்பன்; இறந்தால் இருவிசும்(பு) ஏறுவன்; ஏறிவந்து
பிறப்பன்; பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோ? என்(று), என்னுள்ளங் கிடந்து மறுகிடுமே 36

படைக்கல மாகஉன் நாமத்து எழுத்துஅஞ்சுஎன் நாவிற்கொண்டேன்;
இடைக்கலம் அல்லேன்; எழுபிறப்பும் உனக்கு ஆட்செய்கின்றேன்;
துடைக்கினும் போகேன்; தொழுது வணங்கித்தூ நீறுஅணிந்துஉன்
அடைக்கலங் கண்டாய்; அணிதில்லைச் சிற்றம் பலத்தரனே

வெம்மை நமன்தமர் மிக்கு விரவி விழுப்பதன்முன்
இம்மையுன் தாள்என்றன் நெஞ்சத்து எழுதிவை; ஈங்கிகழில்
அம்மை அடியேற்(கு) அருளுதி என்பதிங்(கு) ஆரறிவார்?
செம்மை தருசத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே. 38

கருவுற்ற நாள்முத லாக,உன் பாதமே காண்பதற்கு
உருகிற்றுஎன் உள்ளமும்; நானும் கிடந்துஅலந்(து) எய்த்துஒழிந்தேன்;
திருவொற்றியூரா! திருவால வாயா? திருவாரூரா!
ஒருபற்றி லாமையும் கண்டிரங் காய்; கச்சி யேகம்பனே. 39

சிவன்எனும் நாமந் தனக்கே யுடையசெம் மேனிஎம்மான்
அவனென்னை யாட்கொண்(டு) அளித்திடு மாகில், அவன் தனையான்
பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்துபன் னாள்அழைத்தால்.
இவன்எனைப் பன்னாள் அழைப்பொழி யான்என் றெதிர்ப்படுமே

முன்னே உரைத்தால் முகமனே ஒக்கும்;இம் மூவுலகுக்(கு)
அன்னையும் அத்தனும் ஆவாய்; அழல்வண்ணா! நீ அலையோ?
உன்னை நினைந்தே கழியும்என் ஆவி; கழிந்ததற்பின்
என்னை மறக்கப் பெறாய்; எம் பிரான்உன்னை வேண்டியதே;

அருந்துணையை; அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை; அகல்ஞாலத் தகத்துள் தோன்றி,
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு,
வான்புலன்கள் அகத்தடக்கி, மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்,
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கு என்றும்
பெருந்துணையைப்; பெரும்பற்றப் புலியூ ரானைப்,
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 42

மனத்தகத்தான்; தலைமேலான்; வாக்கி னுள்ளான்;
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான்; இமையவர்தஞ் சிரத்தின் மேலான்;
ஏழண்டத்(து) அப்பாலான்; இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான்; நறுங்கொன்றைப் போதின் உள்ளான்;
பொருப்பிடையான்; நெருப்பிடையான்; காற்றினுள்ளான்;
கனத்தகத்தான்; கயிலாயத்(து) உச்சி யுள்ளான்;
காளத்தி யான் அவன்என் கண்ணு ளானே. 43

நாமார்க்குங் குடியல்லோம்; நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்;
ஏமாப்போம், பிணியறியோம், பணிவோம் அல்லோம்;
இன்பமே எந்நாளும் துன்பமில்லை;
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன், நற்சங்க வெண்குழை ஓர்காதிற்
கோமாற்கே, நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே. 44

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க்(கு) என்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 45

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக,
வாய்மையே தூய்மையாக, மனம் அணி இலிங்கமாக,
நேயமே நெய்யும் பாலா, நிறைய நீர் அமைய ஆட்டிப்,
பூசனை ஈசனார்க்குப் போற்று அவிக்காட்டினோமே. 46

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்அமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற்கு அரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க்(கு) ஆற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 47

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத்(து) அயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி 48

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளோடு கோவணமும் தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய் என்றும்
செல்கதிக்கு வழிகாட்டும் சிவனே என்றும்
துடியனைய இடைமடவாள் பங்கா! என்றும்
சுடலைதனில் நடமாடும் சோதீ என்றும்
கடிமலர்தூய்த் தொழும்அடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 49

திருவே;யென் செல்வமே; தேனே; வானோர்
செழுஞ்சுடரே; செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவே;என் னுறவே;என் ஊனே; ஊனின்
உள்ளமே; உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே;யென் கற்பகமே; கண்ணே; கண்ணிற்
கருமணியே; மணியாடு பாவாய், காவாய்:
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்;
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே; 50

பேரா யிரம்பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க்(கு) என்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. 51

எல்லா வுலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ. 52

இரப்பவர்க்கு ஈய வைத்தார்
ஈபவர்க்குஅருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம்
கடு நரகங்கள் வைத்தார்
பரப்புநீர்க் கங்கை தன்னைப்
படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக்கு அருளும் வைத்தார்
ஐயன் ஐயாற னாரே. 53

மின்காட்டுங் கொடிமருங்குல் உமையாட்(கு) என்றும்
விருப்பவன்காண்;பொருப்புவலிச்சிலைக்கையோன்காண்;
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக்(கு) அருளினோன்காண்;
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு, வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவில் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்;அவனென் சிந்தையானே. 54

ஒன்றாகி உலகனைத்தும் ஆனார் தாமே
ஊழிதோ(று) ஊழி உயர்ந்தார் தாமே
நின்றாகி எங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ ஆகாசம் ஆனார் தாமே
கொன்றாடுங் கூற்றை உதைத்தார் தாமே
கோலப் பழனை உடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 55

பூக்கைக் கொண்டு அரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவிற்றிலார்
ஆக்கைக்கே இரைதேடி அலமந்து
காக்கைக்கே இரையாகிக் கழிவரே. 56

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்துகி டப்பதே. 57

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும்
காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே. 58

கங்கையைச் சடையுள் வைத்தார்
கதிர்ப்பொறி அரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார்
திசைதிசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார்
மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையுள் அனலும் வைத்தார்
ஐயன்ஐ யாற ஞரே. 59

விறகில் தீயினன்; பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன்; மாமணிச் சோதியான்;
உறவு கோல் நட்டு. உணர்வு கயிற்றினல்
முறுக வாங்கிக் கடைய.முன் நிற்குமே. 60

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து,
தரணியொடு வானளத் தருவரேனும்,
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்,
மாதேவர்க் ஏகாந்தர் அல்லராகில்;
அங்கமெலாங் குறைந்துஅழுகு தொழுநோயராய்
ஆஉரித்துத் தின்றுழலும் புலையரேனும்,
கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில்,
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே. 61

அல்லல் என்செயும்? அருவினை என்செயும்?
தொல்லை வல்வினைத் தொந்தம் தான் என்செயும்?
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்(கு)
எல்லை இல்லதோர் அடிமைபூண் டேனுக்கே. 62

சகமலாது அடிமையில்லை; தானலால் துணையும் இல்லை;
நகமெலாம் தேயக் கையால் நாள்மலர் தொழுது தூவி,
முகமெலாம் கண்ணீர் மல்க முன்பணிந்து ஏத்தும் தொண்டர்
அகமலால் கோயில் இல்லை; ஐயன் ஐயாற னார்க்கே. 63

நிறைந்தமா மணலைக் கூப்பி
நேசமோ(டு) ஆவின் பாலைக்
கறந்துகொண்(டு) ஆட்டக் கண்டு
கறுத்ததன் தாதை தாளை
எறிந்த மாணிக்கு அப்போதே
எழில்கொள் சண்டீசன் என்னச்
சிறந்தபேர் அளித்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே. 64

நற்பதத்தார் நற்பதமே! ஞான மூர்த்தி!
நலஞ்சுடரே! நால்வேதத்(து) அப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய்! இதுவுன் தன்மை!
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே! யானுன்னை விடுவேன் அல்லேன்;
கனகமா மணிநிறத்தெங் கடவு ளானே. 65

நின்னுவார் பிறரின்றி நீயே ஆனாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னானாய் மன்னவர்க்கோர் அமுத மானாய்
மறைநான்கும் ஆனாய் ஆறு அங்கம் ஆனாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே! உன்னை
என்னானாய் என்னானாய் என்னின் அல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே. 66

மனம்எனும் தோணிபற்றி மதிஎனும் கோலைஊன்றிச்
சினம்எனும் சரக்கைஏற்றிச் செறிகடல் ஓடும்போது
மதன்எனும் பாறைதாக்கி மறியும்போது
அறியவொண்ணாது
உனைஉனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடையகோவே.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையினாற் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறுநில்லே. 68

ஏதும் ஒன்றும் அறிவில ராயினும்
ஓதி அஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர்மாற் பேறரே. 69

என்னில் ஆரும் எனக்கு இனியார் இல்லை
என்னிலும் இனியான் ஒருவன் உளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே. 70

பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தற்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டங்(கு) ஆர்வத்தை
யுள்ளேவைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினால் இடவல் வார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்டனாரே. 71

விளக்கினாற் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றி யாகும்;
துளக்கில்நன் மலர் தொடுத்தால் தூயவிண் ஏறலாகும்;
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும்;
அளப்பில கீதம் சொன்னார்க்(கு) அடிகள்தாம் அருளு
மாறே. 72

தொழுது தூ மலர் தூவித் துதித்து(நின்று)
அழுது காமுற்(று) அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே. 73

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னன்பு ஆலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே. 74

சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்
பாத்திரம் சிவம் என்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே. 75

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்(டு) உண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ(று) அணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ என்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே. 76

நெஞ்சம் என்பதோர் நீள்கயந் தன்னுளே
வஞ்சம் என்பதோர் வான்சுழிப் பட்டுநான்
துஞ்சும் போதும்நின் நாமத் திருஎழுத்(து)
அஞ்சும் தோன்ற அருளும்ஐ யாறரே. 77

சுந்தரர்

திருக்கயிலையில், சிவபிரானுக்கு அணுக்கத் தொண்டராக, ஆலால சுந்தரர் என்னும் பெயர்பெற்று விளங்கியவர். உமாதேவியின் சேடியராகிய அநிந்திதை கமலினி என்பவரைக் காதலித்து, திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூரில், சடையனார், இசை ஞானியார் என்னும் தந்தை தாயர்க்கு மைந்தராகத் தோன்றினார். நரசிங்க முனையரையர் என்னும் சிற்றரசரால், மகன்மை முறையில் எடுத்து வளர்க்கப் பெற்றார். இவரது திருமணத்தில் இறைவன் ஒரு முதிய வேதியராக வந்து இவரைத் தடுத்தாட் கொண்டார். அப்போது திருவெண்ணெய் நல்லூரில், 'பித்தா பிறைசூடி' என்னும் பதிகம் பாடியருளினார். திருத்துறையூரில் பதிகம் பாடித் தவநெறி வேண்டிப் பெற்றார். திருவதிகையில் இறைவனால் திருவடித் தீக்கை செய்யப் பெற்றார் அப்போது 'தம்மானை அறியாத சாதியார் உளரே' என்னும் பதிகம் பாடினார். திருவாரூரில் "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" எனத் தொடங்கும் திருத்தொண்டத்தொகை பாடினார்; பரவையாரை மணந்தார். குண்டையூர்க்கிழார் என்னும் அன்பர், இவருக்கு வேண்டிய நெல்லைக் கொடுத்து வந்தார். "நீள நினைந்தடியேன்" என்னும் பதிகம்பாடித் திருக்கோளிலி இறைவனை வேண்டி, அந்நெல் மலையைத் திருவாரூரில்

சேர்ப்பிக்கச் செய்தார். 'தம்மையே புகழ்ந்து' என்னும் பதிகம்பாடி, செங்கல்லைச் செம்பொன்னுக்கிய திருப் புகலூர்ப் பெருமானைத் துதித்துப் போற்றினுர். நாட்டியத் தான்குடியில் வாழ்ந்த கோட்புலியாரின் மகளிராகிய சிங்கடி, வனப்பகை என்னும் இருவரையும் தம் மக்களாக ஏற்றுக் கொண்டார். இறைவன் அளித்த பன்னீராயிரம் பொன்னைத் திருமுதுகுன்றத்தில் மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர்க் கமலாலயக் குளத்தில் எடுத்தார். திருக் குருகாவூரில் பொதி சோறும், திருக்கச்சூரில் பிச்சைச் சோறும் இறைவனே கொணர்ந்துதரப் பெற்றுர். திருப் பாச்சிலாச்சிராமம், திருவோணகாந்தன்தளி ஆகிய தலங் களிற் பதிகம்பாடி இறைவன்பாற் பொன் பெற்றுர். திரு வொற்றியூரில் சங்கிலியாரை மணந்தார். திருவெண்பாக் கத்தில் ஊன்று கோல் பெற்றுர். சபதம் பொய்த்தமை யால் தாம் இழந்த இடக்கண்ணை 'ஆலந்தான் உகந்து' என்னும் பதிகம்பாடிக் காஞ்சிபுரத்திலும், 'மீளா அடிமை உமக்கே ஆளாய்' என்னும் பதிகம்பாடி வலக்கண்ணைத் திருவாரூரிலும் பெற்றுர். இறைவனைப் பரவையார் பால் தூது அனுப்பினுர். விறல் மிண்டர், ஏயர்கோன் கலிக் காமர், சோமாசி மாறர், சேரமான் பெருமாள் முதலிய வர்களுடன் நட்புக் கொண்டார். திருப்புக்கொளியூர் அவிநாசியில் ''எற்றுன் மறக்கேன்'' என்னும் பதிகம் பாடி முதலை விழுங்கிய மதலையை மீட்டார்.

மலைநாட்டு அரசர் ஆகிய சேரமான் பெருமாள் நாய னுர் தமக்கு அளித்த பரிசில்களாகிய பொன்னையும் பொருளை யும், சிவபெருமான் தம் திருவிளையாடலால் சிவகணங்களை வேடர்களாக ஏவி வழிப்பறி செய்விக்க, திருமுருகன்

பூண்டி என்னும் தலத்தில் 'கொடுகுவெஞ்சிலை வடுக வேடுவர்' என்னும் பதிகம்பாடி. அவைகளை இறைவனி.. அருளால் மீண்டும் பெற்றார். 'தான் எனை முன்படைத்தான்' என்னும் பதிகம் பாடித் திருவஞ்சைக்களத்தினின்று, ஆடிச் சுவாதி நாளில், இறைவன் சிவகணங்களுடன் அனுப்பிய வெள்ளையானை மீது ஏறித் திருக்கயிலையை அடைந்தார்.

௭.

சுந்தரமூர்த்தி நாயனார்

தேவாரம்.

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை
வைத்தாய்; பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள்
அத்தா! உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே. 78

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 79

அழுக்கு மெய்கொடு உன்திருவடி அடைந்தேன்;
அதுவும் நான்படப் பாலது ஒன்றானால்;
பிழுக்கை வாரியும் பால் கொள்வர் அடியேன்;
பிழைப்பன் ஆகிலும் திருவடிப் பிழையேன்;
வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
மற்றுநான் அறியேன் மறுமாற்றம்;
ஒழுக்க என்கணுக்கு ஒரு மருந்து உரையாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே. 80

பண்ணிடைத் தமிழொப்பாய்; பழத்தினிற்
சுவையொப்பாய்;
கண்ணிடை மணியொப்பாய்; கடுவிருள் சுடரொப்பாய்;
மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீஅன்றே; 81

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலும் ஆம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே. 82

முத்தா! முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள்
உமைபங்கா!
சித்தா! சித்தித் திறங்காட்டுஞ் சிவனே! தேவர் சிங்கமே!
பத்தா! பத்தர் பலர்போற்றும் பரமா! பழையனூர் மேய
அத்தா! ஆலங் காடா! உன் அடியார்க்(கு) அடியேன்
ஆவேனே. 83

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணு
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்(து) அணி
ஆரூ ரானை மறக்கலு மாமே. 84

திருவும்மெய்ப் பொருளும் செல்வமும் எனக்(கு) உன்
சீருடைக் கழல்களென்(று) எண்ணி
ஒருவரை மதியா(து) உருமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனுய்த் திரிவேன்;
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய்! வாயினல் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தா!பரஞ் சுடரே. 85

ஆலந் தான்உகந்(து) அமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்உடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 86

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்
நாவினுக்கு அரையன் நாளைப் போவானும்
கற்றசூதன் நற்சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்லன் என்றிவர்கள்
குற்றம் செய்யினுங் குணமெனக் கருதும்
கொள்கைகண்டு நின் குரைகழல் அடைந்தேன்
பொற்றிரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கைசூழ் திருப்புன்கூர் உளானே. 87

மாணிக்கவாசகர்

பாண்டிய நாட்டில் மதுரைக்கு அருகில், திருவாதவூரில், ஆமாத்திய அந்தணர் குலத்தில், சம்புபாதாசிரியர், சிவ ஞான வதியார் என்னும் இருவரும் இல்லறம் நடத்தி வந்தனர். இறைவனின் அருளாலும் அவர்களின் அரும் பெரும் தவத்தாலும், ஓர் அழகிய ஆண்குழந்தை உதித்தது. அவர்கள் திருவாதவூரில் உள்ள இறைவனின் நினைவாக அதற்கு வாதவூரன் என்று பெயரிட்டுக் கண்ணும் கருத்து மாக வளர்த்து வந்தனர். வாதவூரர் இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து, பெரும் புகழ் பெற்று விளங்கினர். அஃது அறிந்த அரிமர்த்தன பாண்டியன் ''தென்னவன் பிரமராயன்'' என்னும் பட்டமும், பலவகை விருதுகளும் அளித்து, அவரைத் தனக்கு முதலமைச்சராக நியமித்துக் கொண்டான். திருவாதவூரர் தமது அமைச்சியற் கடமை களைக் கவனித்துக் கொண்டே, அதில் பற்றுவைக்காமல் சிவஞானம் பெறுதலிலேயே கருத்தூன்றி, ஞானசிரியனின் அருளை எதிர் நோக்கி இருந்தார்.

இந்நிலையில் அரிமர்த்தன பாண்டியன் கீழ்க்கடற்கரை யில் புதிய நல்ல குதிரைகள் விலைக்கு வந்திருத்தலைக் கேள்வியுற்று, அவைகளை வாங்கி வருமாறு ஏராளமான பொன்னையும் பொருளையும் கொடுத்து, வாதவூரரை அனுப்பி வைத்தான், அமைச்சராகிய வாதவூரர் அதன் படியே குதிரைகள் வாங்கி வரச் சென்றார். வழியில் திருப் பெருந்துறை என்னும் தலத்தை அடைந்தார். அங்கே

இவரை ஆட்கொள்வதற்காகச் சிவபெருமான் சிவகணங்கள் சீடராக உடன் இருக்க, ஒரு சிவயோகியின் வேடம் கொண்டு, ஒரு குருந்தமரத்தின் நிழலில் எழுந்தருளி இருந்தார். அவரைக் கண்ட அளவில் வாதவூரர் தம்மை மறந்தார். தமது உலகியற் கடமைகளைத் துறந்தார். அவரைப் பணிந்து அடிமையாயினார். சிவபெருமான் அவருக்குக் குருநாதராகக் காட்சி தந்து, ஞானதீக்கை செய்தருளினார். அதனால் சிவஞானம் கைவரப்பெற்ற திருவாதவூரர், கருங்கல் மனமும் கரைந்து உருகும்படி, தேனும் பாலும் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் தெய்விகப் பாடல்களைப் பாடினார். அவற்றின் ஒவ்வொரு சொல்லும் (வாசகமும்), மாணிக்கம் போல் இருந்தது. அதனால் குருநாதராக வந்த சிவபெருமான், வாதவூரருக்கு மாணிக்கவாசகர் என்னும் திருப்பெயர் சூட்டியருளினார். வாதவூரர் தாம் குதிரை வாங்கக் கொணர்ந்த அரசனின் பொருளைக் கொண்டு, திருப்பெருந்துறையில் இறைவனுக்குச் சிறந்த பெருங்கோவில் ஒன்றை அமைத்துப் பணி செய்து வந்தார்.

செய்தி அறிந்த அரிமர்த்தனன், மிக்க சினம் கொண்டான். உடனே அவரைத் தன்னிடம் வருமாறு பணித்து ஓலை எழுதி ஆட்களை அனுப்பினான். இறைவன் அருளிச் செய்தபடி, 'ஆவணி மூல நாளில் தாம் வாங்கிய புதிய குதிரைப்படைகள் வந்து சேரும்' என்று மாணிக்கவாசகர் அரசனுக்குத் தெரிவித்தார். மாணிக்கவாசகரின் மாண்பை உலகுக்கு உணர்த்த விரும்பிய சிவபெருமான், தாம் ஒரு குதிரைச் சேவகராக வேடம் பூண்டு, காட்டில் உள்ள நரிகளை எல்லாம் பரிகளாக மாற்றிக்கொண்டு வந்து, ஆவணி மூல நாளில் பாண்டியனிடம் ஒப்படைத்துச் சென்றார்.

ஆனால் அன்றிரவு இறைவனது அருளால் அப்பரிகள் முன் போல் நரிகளாக மாறி ஊளை இட்டு நகரமக்களைத் துன் புறுத்திக் காட்டிற்குள் சென்று ஓடி மறைந்தன.

மாணிக்கவாசகர் தன்னை ஏமாற்றி விட்டதாக மன்ன வன் எண்ணினன். அவரைக் கொதிக்கின்ற வைகையாற்று மணலில் நிறுத்திப் பல கொடிய தண்டனைகள் புரிந்தான். உடனே இறைவன் வைகையாற்றில் பெருவெள்ளம் ஏற் படச் செய்தார். வெள்ளத்தால் நகரம் அழிவதைத் தடுக்கக் கரைகட்டும்படி அரசன் குடிமக்கள் அனைவர்க் கும் கட்டளை இட்டான். எல்லா உடைப்புகளும் அடை பட்டன. வந்தி என்ற கிழவிக்கு உரிய பங்கு மட்டும் அடைபடவில்லை. சிவபெருமான் வந்திக்குக் கூலியாளாக வந்தான். அவள் அன்புடன் அளித்த பிட்டை வாங்கி உண்டான். ஆயினும் அவளது பங்கைக் கூலியாளாக வந்த இறைவன் அடைக்காமலே பொழுது போக்கி அருள் விளையாடல்கள் புரிந்தான். உடைப்பு அடைபடாமை கண்டு, அரிமர்த்தனன் சீற்றம் கொண்டு, கூலியாளாகிய இறைவனைப் பிரம்பால் ஓங்கி அடித்தான். இறைவன் உடனே மறைந்தான். அப்பிரம்பு அடி, அனைவரின் முதுகி லும் பட்டது. பாண்டியன் இறைவனின் அருளையும், மாணிக்கவாசகரின் பெருமையையும் உணர்ந்தான்.

பின்னர் மாணிக்க வாசகர், தமது அமைச்சர் பதவி யைத் துறந்து திருப்பெருந்துறை சென்றார். இறைவனுக் குத் தொண்டு செய்வதில் முனைந்தார். திருவுத்தரகோச மங்கை, திருவிடைமருதூர், திருவண்ணாமலை, திருக்கழுக் குன்றம், காஞ்சிபுரம் முதலிய தலங்களைத் தரிசித்து

இறுதியில் தில்லையை அடைந்தார். அங்கே புத்தர்களை வாதில் வென்றார். ஊமையாக இருந்த இலங்கை அரசனின் மகளைத் 'திருச்சாழல்' என்னும் பதிகம் ஓதிப் பேசுமாறு செய்வித்தார். தில்லையிலேயே பலகாலம் வாழ்ந்தார்: திருவாசகம் பாடினார். இறைவனே ஒரு முதிய அந்தணர் வடிவில் வந்து வேண்டிக் கொண்டபடி திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் ஞானநூலைப்பாடி அருளினார். அந்தணராக வந்த இறைவன் மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்த திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரண்டையும் தமது திருக்கைகளால் எழுதிக் கொண்டு, 'அழகிய திருச்சிற்றம்பலம் உடையான்' என்று கையெழுத்திட்டு, தில்லையில் சிற்சபையில் திருவைந்தெழுத்துப்படியின் கீழ் வைத்து மறைந்தார். தில்லை வாழ் அந்தணர்கள் அவற்றைக் கண்டெடுத்து, மாணிக்கவாசகரிடம் சென்று பணிந்து வணங்கி, அவற்றுக்குப் பொருள் விளக்கும்படி விண்ணப்பித்துக் கொண்டனர். மாணிக்கவாசகர் அவர்களுக்குத் தில்லைத் திருக்கூத்தனைச் சுட்டி, இவனே பொருள் எனக் காட்டி, ஆனிமகத்துத் திருநாளில் இறைவனோடு இரண்டறக் கலந்தார்.

௨

மாணிக்கவாசகர்

திருவாசகம்

மாவடு வகிரன்ன கண்ணிபங்கா ! நின் மலரடிக்கே
கூவிடுவாய்; கும்பிக்கே இடுவாய்; நின் குறிப்பறியேன்
பாவிடை ஆடுகுழல்போல் கரந்து பரந்த(து) உள்ளம்;
ஆகெடு வேன்; உடை யாய்; அடி யேன்உன் அடைக்கலமே

தேன்பழச் சோலை பயிலும் சிறுகுயிலே இதுகேள் நீ
வான்பழித்து இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன் பழித்து உள்ளம் புகுந்து என் உணர்வது வாய ஒருத்தன்
மான் பழித்து ஆண்ட மெல்நோக்கி மணாளனை நீ
வரக்கூவாய்

சாதிகுலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத்து ஆட்கொண்டு
பேதை குணம் பிறர் உருவம் யான் எனது என் உரை
மாய்த்துக்
கோது இல் அமுது ஆனானைக் குலாவுதில்லை கண்டேனே. 90

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென்(று) அவரவரைக் கூத்தாட்டு
வானாகி, நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே? 91

சிந்தனைநின் தனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார
வந்தெனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே! மலையே! உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே! இரண்டுமிலித் தனிய னேற்கே. 92

போற்றியோ நமச்சி வாய புயங்கனே மயங்கு கின்றேன்;
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை;
போற்றியோ நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்,
போற்றியோ நமச்சி வாய சய!சய! போற்றி! போற்றி. 93

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்னவகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏல் ஓர் எம் பாவாய் 94

வழங்குகின் றாய்க்குஉன் அருளார் அமுதத்தை வாரிக்
கொண்டு
விழுங்குகின் றேன்;விக்கி னேன்;வினை யேன்என் விதியின்மை
யால்
தழங்கருந் தேன்அன்ன தண்ணீர் பருகத்தந்து உய்யக்
கொள்ளாய்
அழுங்குகின் றேன்;உடை யாய்!அடி யேன்உன் அடைக்
கலமே. 95

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே! இடையறா அன்புஉனக்கு என்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் உடையானே! 96

யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே! அமுதே! கரும்பின் தெளிவே! தித்திக்கும்
மானே! அருளாய் அடியேன் உனைவந்(து) உறுமாறே. 97

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண்; அம்மானாய்! 98

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ! 99

வணங்கத் தலைவைத்து, வார்கழல் வாய் வாழ்த்தவைத்து,
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத்(து), எம்பெருமான்
அணங்கொர்(டு) அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ! 100

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப
தானல் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்அரு ளைப்புரி
யாய்; பொன் னம்பலத்(து) எம்
முடியா முதலே! என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்றே. 101

மாறிநின்(று) என்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்து, அமுதே
ஊறிநின்(று) என்னுள் எழுபரஞ் சோதி!
உள்ளவா காணவந் தருளாய்;
தேறலின் தெளிவே! சிவபெரு மானே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே! என்னுடை அன்பே. 102

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா! ஆர்கொலோ சதுரர்?
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்;
யாதுநீ பெற்றதொன்று என்பால்?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே!
எந்தையே! ஈசா! உடலிடங் கொண்டாய்;
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே. 103

பாரொடு விண்ணுய்ப் பரந்தஎம் பரனே!
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்;
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஆரொடு நோகேன்? ஆர்க்கெடுத் துரைக்கேன்?
ஆண்டநீ அருளிலை யானுல்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்;
வருகஎன் றருள்புரி யாயே. 104

வேண்டத் தக்க(து) அறிவோய்நீ!
வேண்ட முழுதுந் தருவோய்நீ!
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ!
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா(து) அருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்(று) உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே. 105

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய்! என்னைஆட் கொண்ட
போதே கொண்டிலையோ ?
இன்றோர் இடையூ(று) எனக்குண்டோ ? எண்தோள்
முக்கண் எம்மானே !
நன்றே செய்வாய்; பிழைசெய்வாய்: நானே ?
இதற்கு நாயகமே. 106

அம்மையே! அப்பா; ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்தஆ ரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெரு மானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ(து) இனியே. 107

பால்நினைந்(து) ஊட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ(து) இனியே. 108

நானேயோ தவஞ்செய்தேன்! சிவாயநம எனப்பெற்றேன்,
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்(கு) அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே. 109

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கு எழுந்தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கைஉள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறுஅது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 110

நினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தோறும் எப்போதும்
அனைத்தெலும்(பு) உள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 11௨

பிணியெலாம் வரினும் அஞ்சேன்
　　பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியினான்தன்
　　தொழும்பரோடு அழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச்
　　சேவடி பரவி வெண்ணீறு
அணிகிலாதவரைக் கண்டால்
　　அம்ம! நாம் அஞ்சுமாறே. 11௩

காலம் உண்டாகவே காதல் செய்து
　　உய்ம்மின் கருதரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன்
　　வானவர் நண்ணரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்
　　பிரான் தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான்
　　வந்து முந்துமினே 11௪

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என் அப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை 'வா' என்ற வான்கருணைச்
சுண்ணப் பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 11௫

ஸ்ரீ :

திவ்வியப் பிரபந்தத் திரட்டு


(பகுதி இரண்டு)

ஆழ்வார்கள் வரலாறு

திருமால் அடியார்களாக விளங்கி, தமிழகத்தில் திருமால்நெறியைப் பரப்பிய பெரியோர்கள் பன்னிருவர் ஆவர். இறையருள் இன்பநலத்திலும், அவனது எல்லையற்ற இனிய மங்கள குணங்களிலும், ஆழ்ந்து திளைத்து நின்ற அப்பெருமக்களை ஆழ்வார்கள் எனத் தமிழ் கூறும் நல்லுலகம் பெரிதும் சிறப்பித்துப் போற்றி வழிபட்டு வருகின்றது.

''பொய்கையார், பூதத்தார், பேயார், புகழ்மழிசை
ஐயன், அருள்மாறன், சேரலர்கோன்—துய்யபட்ட
நாதன், அன்பர்தாள்தூளி, நற்பாணன், நற்கலியன்,
ஈதுஇவர் தோற்றத்து அடைவுஆம் இங்கு''

என்னும் பாடலில் ஆழ்வார்களின் பெயர்களும், அவர்கள் தோன்றியருளிய முறையும் தொகுத்துக் கூறப்பட்டிருத்தல் காணலாம். இதன்படி, பெரியாழ்வாருடன் ஆண்டாளையும் நம்மாழ்வாருடன் மதுரகவிகளையும் ஒருங்கு சேர்த்து இணைத்து, ஆழ்வார்கள் பதின்மர் என்றும் சிலர் கூறுவதுண்டு.



ஸ்ரீ :

திவ்வியப் பிரபந்தத் திரட்டு

பெரியாழ்வார் வரலாறு

பாண்டிநாட்டில், ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் திவ்விய தேசத்தில், வேயர் குலத்தில், பதுமையாருக்கும் முகுந்தாச் சாரியாருக்கும், ஆனி மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில், கருடஅம்சராகத் தோன்றியருளினுர். இவர் தமது சித்தத்தில் எப்பொழுதும் இடையருது எண்ணி எண்ணி விஷ்ணுவை வழிபட்டு வந்தவராதலின், இவருக்கு விஷ்ணுசித்தர் என்னும் பெயர் அமைந்தது.

பாண்டியனின் அரசவையில் பரதத்வ நிச்சயம் செய்து ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருள் என்று நிறுவிப் பொற்கிழி அறுத்து, சகலவேத சாத்திர ஞானச்செல்வராகத் திகழ்ந்தமையினுல் ''பட்டர்பிரான்'' என்ற பெயரும் இவருக்கு வழங்கும். இவர் ஸ்ரீவில்லிபுத்தூர் வடபெருங்கோயிலுடையானுக்கு மிக்க அன்புபூண்டு, திருமாலைகள் புனைந்து சாத்தி வழிபட்டு வந்தவர். திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி என்னும் இரண்டும், இவர் அருளிச் செய்த பிரபந்தங்களாகும். பெருமாளுக்குப் பல்லாண்டு பாடி மங்களாசாசனம் செய்த பரிவின் மிகுதியினுல், ஏனைய ஆழ்வார்களினும் பெருமை பெற்றவராதலின், இவருக்குப் பெரியாழ்வார் என்னும் திருப்பெயர் ஏற்பட்டது.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறுயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணு! உன்
செவ்வடி செவ்வி திருக் காப்பு 1

அறுசீர் ஆசிரிய விருத்தம்

அடியோ மோடும்நின் னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு,
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு,
வடிவார் சோதி வலத்துறை யும்சுட
ராழியும் பல்லாண்டு,
படைபோர் புக்குமு ழங்கும்அப் பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே 2.

அல்வழக் கொன்றுமில் லாஅணி கோட்டியர்
கோன், அபி மான துங்கன்,
செல்வனைப் போலத் திருமா லே!நானும்
உனக்குப் பழவடியேன்,
நல்வகை யால்நமோ - நாரா யணவென்று
நாமம் பலபரவிப்,
பல்வகை யாலும் பவித்திர னே! உன்னைப்
பல்லாண்டு கூறுவனே. 3.

பல்லாண் டென்று பவித்திர னைப்பர
மேட்டியை, சார்ங்கமென்னும்
வில்லாண்டான் தன்னை வில்லிப்புத் தூர்விட்டு
சித்தன் விரும்பியசொல்
நல்லாண் டென்று நவின்றுரைப் பார்நமோ
நாராய ணயவென்று
பல்லாண் டும்பர மாத்மனைச் சூழ்ந்திருந்
தேத்துவர் பல்லாண்டே. 4.

திரு. 4.

"நாஅகாரியம் சொல்லிலாதவர்,
நாடொறும்விருந் தோம்புவார்,
தேவகாரியம் செய்துவேதம்
பயின்றுவாழ்திருக் கோட்டியூர்,
மூவர்காரிய மும்திருத்தும்
முதல்வனைச்சிந்தி யாத.அப்
பாவகாரிகளைப்படைத்தவன்
எங்ஙனம்படைத் தான்கொலோ! 5.

பூதமைந்தொடு வேள்வியைந்து
புலன்களைந்து பொறிகளால்,
ஏதமொன்றுமி லாதவண்மையி
னார்கள்வாழ்திருக் கோட்டியூர்,
நாதனைநர சிங்கனைநவின்
றேத்துவார்க ளுழக்கிய,
பாததூளி படுதலாலிவ்
வுலகம்பாக்கியம் செய்ததே. 6.

காசின்வாய்க்கரம் விற்கிலும்கர
வாதுமாற்றிலீ சோறிட்டுத்,
தேசவார்த்தைப டைக்கும்வண்கையி
னார்கள்வாழ்திருக் கோட்டியூர்.
கேசவா!புரு டோத்தமா!கிளர்
சோதியாய்!குற ளாவென்று,
பேசுவாரடி யார்களெந்தம்மை
விற்கவும் பெறுவார்களே. 7.

"ஆசை வாய்ச்சென்ற சிந்தைய ராகி
அன்னை யத்தனென் புத்திரர் பூமி.
வாச வார்குழ லாளென்று மயங்கி
மாளு மெல்லைக்கண் வாய்திற வாதே.
கேச வாபுரு டோத்தமா என்றும்
கேழ லாகிய கேடிலீ யென்றும்.
பேசு வாரவ ரெய்தும் பெருமை
பேசு வான்புகில் நம்பர மன்றே. 8.

சோர்வி னால்பொருள் வைத்ததுண் டாகில்
சொல்லு சொல்லென்று சுற்று மிருந்து.
ஆர்வி னவிலும் வாய்திற வாதே
அந்த கால மடைவதன் முன்னம்,
மார்வ மென்பதோர் கோயி லமைத்து
மாதவ னென்னும் தெய்வத்தை நாட்டி.
ஆர்வம் என்பதோர் பூவிட வல்லார்க்கு
அரவ தண்டத்தி லுய்யலு மாமே. 9.

மேலெ ழுந்ததோர் வாயுக் கிளர்ந்து
மேல்மி டற்றினை யுள்ளெழ வாங்கி.
கா லும் கையும் விதிர்விதிர்த் தேறிக்
கண்ணு றக்கம தாவதன் முன்னம்,
மூல மாகிய ஒற்றை யெழுத்தை
மூன்று மாத்திரை யுள்ளெழ வாங்கி,
வேலை வண்ணனை மேவுதி ராகில்
விண்ண கத்தினில் மேவலு மாமே. 10.

''தன்னடியார் திறத்தகத்துத் தாமரையா
ளாகிலும் சிதகு ரைக்குமேல்,
என்னடியா ரதுசெய்யார் செய்தாரேல்
நன்றுசெய்தா ரென்பர் போலும்;
மன்னுடைய விபீடணற்காய் மதிலிலங்கைத்
திசைநோக்கி மலர்க்கண் வைத்த,
என்னுடைய திருவரங்கற் கன்றியும்
மற்றொருவர்க் காளா வாரே? 11

''துப்புடை யாரை யடைவ தெல்லாம்
சோர்விடத் துத்துணை யாவ ரென்றே,
ஒப்பிலே னாகிலும் நின்ன டைந்தேன்
ஆனைக்கு நீயருள் செய்த மையால்,
எய்ப்பென்னை வந்து நலியும் போதங்கு
ஏதும்நா னுன்னை நினைக்க மாட்டேன்,
அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே! 12

வாக்குத் தூய்மை யிலாமையி னாலே
மாத வா!உன்னை வாய்க்கொள்ள மாட்டேன்,
நாக்கு நின்னையல் லால்அறியாது
நான்அது அஞ்சுவன் என்வச மன்று,
மூர்க்குப் பேசுகின் றான்இவன் என்று
முனிவா யேலும்என் நாவினுக் காற்றேன்,
காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்
கார ணாகரு ளக்கொடி யானே! 13

சழக்கு நாக்கொடு புன்கவி சொன்னேன்

சங்கு சக்கர மேந்துகை யானே,

பிழைப்ப ராகிலும் தம்மடி யார்சொல்

பொறுப்ப தும்பெரி யோர்கட னன்றே,

விழிக்குங் கண்ணிலேன் நின்கண்மற் றல்லால்

வேறொ ருவரோ டென்மனம் பற்றாது,

உழைக்கோர் புள்ளி மிகையன்று கண்டாய்

ஊழி யேழுல குண்டுமிழ்ந் தானே! 14.

கண்ணா! நான்முக னைப்படைத் தானே!

காரணா! கரி யாய்! அடி யேன்நான்,

உண்ணா நாள்பசி யாவதொன் றில்லை

ஓவா தே'நமோ நாரணா!' என்று,

எண்ணா நாளும் இருக்கெசுச் சாம

வேத நாண்மலர் கொண்டுன் பாதம்

நண்ணா நாள், அவை தத்துறு மாகில்

அன்று எனக்கவை பட்டினி நாளே. 15.

வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை

மெத்தை யாகவிரித்து, அதன் மேலே

கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம்

காண லாங்கொலென் றாசையி னாலே,

உள்ளஞ் சோர வுகந்தெதிர் விம்மி

உரோம கூபங்க ளாய், கண்ண நீர்கள்

துள்ளம் சோரத் துயிலணை கொள்ளேன்

சொல்லாய் யானுன்னைத் தத்துறு மாறே. 16.

"உனக்குப் பணிசெய் திருக்கும்
தவமுடை யேனினிப் போயொருவன்-
றனக்குப் பணிந்து, கடைத்தலை
நிற்கையின் சாயை யழிவுகண்டாய்,
புனத்தினைக் கிள்ளிப் புதுவவி
காட்டியுன் பொன்னடி வாழ்கவென்று,
இனக்குற வர்புதிய துண்ணும்
எழில்மாலிருஞ் சோலை யெந்தாய்! 17.

பறவையேறு பரமபுருடா!
நீயென்னைக் கைக்கொண்டபின்,
பிறவியென்னும் கடலும்வற்றிப்
பெரும்பத மாகின்றதால்,
இறவுசெய்யும் பாவக்காடு
தீக்கொளீஇ வேகின்றதால்,
அறிவையென்னும் அமுதஆறு
தலைப்பற்றி வாய்க்கொண்டதே. 18.

ஆண்டாள்.

ஸ்ரீ வில்லிபுத்தூரில், திருவாடிப்பூரத்தில், பூமிப் பிராட்டியார் அம்சமாகத் தோன்றியருளியவர். தம் முடைய திருநந்தவனத்தில் திருத்துழாய்ச் செடியின் கீழ்க் குழந்தையாகக் கிடந்த இவரை, விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வார் எடுத்துக் **கோதை** என்னும் பெய ரிட்டு வளர்த்து வந்தார். பெரியாழ்வார் வடபெருங் கோயில் உடையானுக்காகத் தொடுக்கும் மலர்மாலைகளைத் தான் முதலில் சூடிமகிழ்ந்து, பிறகு எம்பெருமானுக்குக் கொடுத்தவள் ஆதலின், இவருக்குச் **சூடிக்கொடுத்த நாச்சி யார்** என்றும் ஒரு பெயர் உண்டு. தம் அன்பின் மிகுதி யாலும், காதல் உணர்வின் சிறப்பாலும், ஆண்டவனையே தன்பால் ஏற்று ஆண்டுகொண்டவள் ஆதலின், **ஆண்டாள்** என்றே இவர் மிகவும் சிறப்பாகப் போற்றப் படுவார். ''மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்று அணியரங்கத்து அம்மானுக்கே அற்றுத் தீர்ந்த காதலை உடையவளாய் இருந்து, அப்பெருமானுக்கே மணவாட்டி யாகும் பேறு பெற்று, அவனோடு ஒன்றிக் கலந்தவள். இவர் அருளிச் செய்த பிரபந்தங்கள் **திருப்பாவை**, **நாச்சியார் திருமொழி** என்னும் இரண்டாகும்.

'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்,
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்,
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்,
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்,
நாராயணனே நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.' 1ூ:

குலசேகராழ்வார்.

இவர் சேரநாட்டில், திருவஞ்சைக்களம் என்னும் நகரில் திடவிரதன் என்னும் அரசனுக்குக் கௌஸ்துப அம்சமாக மாசி மாதத்தில் புனர்வசு நட்சத்திரத்தில் திருவவதாரம் செய்தார். தமது குலமரபுக்கு ஏற்ற அரசராய் முடிசூடப் பெற்று, குடிமக்களை நன்கு பாதுகாத்து வந்தார். 'பெருமாள்' என்பது சேர அரசர்களுக்குரிய பட்டப் பெயர். ஆதலின் இவரைக் குலசேகரப் பெருமாள் என்றும் குறிப்பிடுவர். இராமபிரானிடத்தும், இராமாயணத்திலும் இவர் எல்லையில்லாத ஈடுபாடு கொண்டிருந்தார். "ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ, வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்" என்னும் நிலையிற் பக்தி புணர்வில் திளைத்தவர். 'செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே! நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல், அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும் படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே" என்று அருளிச் செய்தவர் இவர்.

இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கும் நெற்றி
இனத்துத்தி யணிபணம் ஆயிரங்கள் ஆர்ந்த,
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்
அணிவிளங்கு முயர்வெள்ளை யணையை மேவி,
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளும்,
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டுஎன்
கண்ணிணைக ளென்றுகொலோ களிக்கும் நாளே! 20.

மறந்திகழும் மனமொழித்து வஞ்சம் மாற்றி
ஐம்புலன்க ளடக்கியிடர்ப் பாரத் துன்பம்
துறந்து, இருமுப் பொழுதேத்தி யெல்லையில்லாத்
தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்ட ரான
அறம்திகழும் மனத்தவர்தம் கதியைப் பொன்னி
அணியரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்,
நிறம்திகழும் மாயோனைக் கண்டென் கண்கள்
நீர்மல்க என்றுகொலோ நிற்கும் நாளே ! 21.

தேட்டரும்திறல் தேனினைத் தென்
னரங்கனை, திரு மாதுவாழ்
வாட்டமில் வனமாலை மார்வனை
வாழ்த்திமால் கொள்சிந் தையராய்,
ஆட்டமேவி யலந்து அழைத்து அயர்வு
எய்தும்மெய்யடி யார்கள் தம்,
ஈட்டம்கண்டிடக் கூடுமேலது
காணும்கண்பய னாவதே. 22.

தோடுலாம்மலர் மங்கைதோளிணை
தோய்ந்ததும்சுடர் வாளியால்
நீடுமாமரம் செற்றதும்நிரை
மேய்த்ததுமிவை யேநினைந்து,
ஆடிப்பாடி அரங்கவோ என்று
அழைக்கும்தொண்ட ரடிப்பொடி
ஆடநாம்பெறில், கங்கைநீர்குடைந்
தாடும்வேட்கையென் னாவதே. 23.

'மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும், இவ்
வையந் தன்னொடும் கூடுவ தில்லையான்,
'ஐய னே! அரங் கா! ' என்றழைக்கின்றேன்,
மையல் கொண்டொழிந் தேனென்றன் மாலுக்கே. 24

பேய ரேயெனக் கியாவரும், யானுமோர்
பேய னேயெவர்க் கும்,இது பேசியென்,
'ஆய னே!அரங் கா!'என்ற ழைக்கின்றேன்,
பேய னாயொழிந் தேனெம்பி ரானுக்கே. 25.

''ஊனேறு செல்வத் துடற்பிறவி யான்வேண்டேன்,
ஆனேறேழ் வென்றா னடிமைத் திறமல்லால்,
கூனேறு சங்கம் இடத்தான்தன் வேங்கடத்துக்,
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே. 26.

ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ,
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்,
தேனார்பூஞ் சோலைத் திருவேங்க டச்சுனையில்,
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே. 27.

'செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே,
நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்,
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்,
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே. 28..

''தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை,
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே
அரிசினத்தா லீன்றதாய் அகற்றிடினும், மற்றவள்தன்
அருள்நினைந்தே யழும்குழவி அதுவேபோன் றிருந்தேனே.

கண்டார் இகழ்வனவே காதலன்றான் செய்திடினும்,
கொண்டானை யல்லால், அறியாக் குலமகள்போல்,
விண்டோய் மதிற்புடைசூழ் வித்துவக்கோட் டம்மா, நீ
கொண்டுஆளா யாகிலுமுன் குரைகழலே கூறுவனே: 30

''கொண்டானை யல்லதறியா'' என்பதும் பாடம்.

வாளால் அறுத்துச்சு டினும்ம ருத்துவன்பால்,
மாளாத காதல்நோ யாளன்போல், மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மா, நீ
ஆளா வுனதருளே பார்ப்பன் அடியேனே. 31;

வெங்கண்திண் களிறடர்த்தாய் வித்துவக்-கோட் டம்மானே
எங்குப்போ யுய்கேனுன் னிணையடியே யடையலல்லால்.
எங்கும்போய்க் கரைகாணா தெறிகடல்வாய் மீண்டேயும்,
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே. 32:

திருமழிசையாழ்வார்.

சென்னைக்கு அருகே, பூந்தண்மலிக்கு அணித்தேயுள்ள திருமழிசை (மஹிசாரக்ஷேத்திரம்) என்னும் திவ்விய தேசத்தில், தைம்மாதத்தில் மக நட்சத்திரத்தில், பார்க்கவ முனிவருக்குப் புதல்வராய்த் திருவாழியின் கூறுகத் திருவவதாரம் செய்தருளினுர். இவர் அவதரித்தபோது உறுப்பொன்றும் காணப் பெறுமல் பிண்டமாய் இருந்ததனுல், இவரை இவர் தந்தையாரும் தாயாரும், ஒரு பிரம்புப் புதரில் எறிந்து விட்டுப் போயினர். திருவாளன் என்னும் ஒரு வேளாளன் அக்குழந்தையைக் கண்டெடுத்து, தன் மனைவி பங்கயச் செல்வியின்பாற் கொடுத்து, அன்புடன் வளர்த்து வந்தான். ஆனுல் அக்குழந்தை பால் பருகாமலும், பசி தாகம் கொள்ளாமலும், ''உண்ணும்சோறு, பருகும்நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்எம்பெருமான்'', என்றபடி, பரம புருஷனையே அனுபவித்து வளர்ந்து வந்தது.

திருமழிசையில் தோன்றியதினுல் இவருக்குத்திருமழிசை யாழ்வார் எனப் பெயர் வழங்குகின்றது. உற்ற வயதடைந்ததும், ''சாக்கியம் கற்ருேம் சமண்கற்ருேம் சங்கரனுர் ஆக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்'' என்றபடி, இவர் உலோகாயதம் பௌத்தம் சமணம் மாயாவாதம் முதலிய பல சமயங்களையும் ஆராய்ந்தார். பின்னர்ச் சைவ சமயம் சார்ந்து, ''**சிவ வாக்கியர்**'' என்னும் பெயர் பூண்டு சில காலம் சிவபிரானை வழிபட்டு வந்தார். இவர் பின்னர்ப் பேயாழ்வார் பேரருளால் பரம ஸ்ரீவைஷ்ணவராய்த் திருந்தினுர். அது முதல் திருமகள் கொழுநனுன நாராயணரையே தியானம் செய்து வந்தார். இவர்தம் பக்தியின் சிறப்பினுல், இவருக்குப் '**பக்திசாரர்**' என்றும் ஒரு பெயர் வழங்கும். **திருச்சந்தவிருத்தம், நான்முகன்திருவந்தாதி** என்

னும் இரு திவ்வியப்பிரபந்தங்கள், இவரால் அருளிச் செய்யப்பெற்றன. இவர் திருவெஃகாவிலுள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் இடத்திலும்; திருக்குடந்தையில் உள்ள ஆராவமுதப் பெருமாளிடத்திலும், மிகவும் ஈடுபாடு கொண்டவராவர் **கணிகண்ணர்** என்பவர், இவருக்கு மாணவராக இருந்தார்.

தூய்மையோக மாயினாய்,துழாயலங்கல் மாலையாய்;
ஆமையாகி யாழ்கடல்து யின்றஆதி தேவ, நின்
நாமதேய மின்னதென்ன வல்லம்அல்லம் ஆகிலும்,
சாம வேத கீதனாய சக்ரபாணி யல்லையே? 33.

நின்றதெந்தை யூரகத்து இருந்ததெந்தை பாடகத்து,
அன்றுவெஃக ணைக்கிடந்தது என்னிலாத முன்னெலாம்,
அன்று நான்பி றந்திலேன்பி றந்தபின்ம றந்திலேன்,
நின்றதும் மிருந்ததும்கி டந்ததுமென் நெஞ்சுளே. 34

ஊனின்மேய ஆவிநீ,உ றக்கமோடு ணர்ச்சிநீ,
ஆனின்மேய ஐந்தும்நீ,அ வற்றுள்நின்ற தூய்மைநீ,
வானினோடு மண்ணும்நீ,வ ளங்கடற்ப யனும்நீ,
யானும்நீய தன்றியெம்பி ரானும்நீயி ராமனே! 35.

வைதுநின்னை வல்லவா பழித்தவர்க்கும், மாறில்போர்
செய்துநின்னைச் செற்றதீயில் வெந்தவர்க்கும் வந்துன்னை,
எய்தலாகு மென்பர்ஆத லால்எம்மாய! நாயினேன்,
செய்தகுற்றம் நற்றமாக வேகொள்ஞால நாதனே! 36.

அத்தனாகி அன்னையாகி ஆளும்எம் பிரானுமாய்
ஒத்துஒவ்வாத பல்பிறப்பு ஒழித்து நம்மை ஆட்கொள்வான்
முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள் மேவினார்
எத்தினால் இடர்க்கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே! 37.

தொண்டரடிப் பொடியாழ்வார்.

இவர் திருக்குடந்தைக்கு அருகிலுள்ள திருமண்டங்குடி என்னும் தலத்தில், மார்கழிக் கேட்டையில், திருமாலின் வனமாலையின் அம்சமாய், வேதம் வல்ல ஒரு பிராமணரின் குடியில் தோன்றியவர். இவரது இயற்பெயர் விப்பிர நாராயணர் என்பது. இவர் ஸ்ரீவைஷ்ணவருக்கு அடிமை பூண்டு ஒழுகி, அவர்களின் திருவடிகளுக்குத் தொண்டு செய்து மகிழ்வதையே, ஒரு பெரும் பேருகக் கருதியிருந்தார். ஆகையால் இவருக்குத் தொண்டரடிப் பொடியாழ்வார் (அன்பர் தாள் தூளி) என்னும் பெயர் ஏற்பட்டது. இவர் திருவரங்கப் பெருமானையே தம் வழிபடு கடவுளாகக் கொண்டவர். திருவரங்கத்தில் அழகிய மணவாளனுக்குத் திருநந்தவனப் பணிபுரிந்து வந்தவர். திருமாலை, திருப்பள்ளி யெழுச்சி என்னும் இரண்டு பிரபந்தங்களை இவர் அருளிச் செய்துள்ளார்.

"காவலிற் புலனை வைத்துக்
 கலிதனைக் கடக்கப் பாய்ந்து,
நாவலிட் டுழிதரு கின்றோம்
 நமன்தமர் தலைகள் மீதே,
மூவுல குண்டு உமிழ்ந்த
 முதல்வ! நின் நாமம் கற்ற,
ஆவலிப் புடைமை கண்டாய்
 அரங்கமா நகரு ளானே! 38.

''பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமர ரேறே!
ஆயர்தம் கொழுந்தே!' என்னும்,
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோக மாளும்,
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே! 39.

வேதநூற் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவ ரேனும்,
பாதியு முறங்கிப் போகும்
நின்றதில் பதினை யாண்டு,
பேதைபா லகன தாகும்
பிணிபசி மூப்புத் துன்பம்,
ஆதலால் பிறவி வேண்டேன்
அரங்கமா நகரு ளானே! 40.

குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கி,
கடல்நிறக் கடவு ளெந்தை
அரவணைத் துயிலு மாகண்டு,
உடலெனக் குருகு மாலோ
என்செய்கே னுலகத் தீரே! 41.

ஊரிலேன் காணி யில்லை,
 உறவுமற் றொருவ ரில்லை,
பாரில்நின் பாத மூலம்
 பற்றிலேன் பரம மூர்த்தி,
காரொளி வண்ண னே!என்
 கண்ணனே! கதறு கின்றேன்.
ஆருளர் களைக ணம்மா!
 அரங்கமா நகரு ளானே! 42

உள்ளத்தே யுறையும் மாலை
 உள்ளுவா னுணர்வொன் றில்லாக்,
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்
 தொண்டுக்கே கோலம் பூண்டேன்,
உள்ளுவார் உள்ளிற்று எல்லாம்
 உடனிருந்து அறிதி யென்று,
வெள்கிப்போ யென்னுள் ளேநான்
 விலவறச் சிரித்திட் டேனே! 43

"பழுதிலா வொழுக லாற்றுப்
 பலசதுப் பேதி மார்கள்,
இழிகுலத் தவர்க ளேனும்
 எம்மடி யார்க ளாகில்,
தொழுமின்நீர் கொடுமின் கொள்மின்!"
 என்றுநின் னோடு மொக்க,
வழிபட வருளி னாய்போன்ம்
 மதிள்திரு வரங்கத் தானே! 44

திருப்பாணாழ்வார்

சோழநாட்டில், உறையூரில் கார்த்திகை மாதத்தில் உரோகிணி நட்சத்திரத்தில், திருமாலினது ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாய்த் தோன்றியருளியவர். இவர் சிறுகுழந்தையாக இருந்தபோது, பாணர் குலத்தில் பிறந்த ஒருவனால் எடுத்து வளர்க்கப் பெற்றமையால், பாணாழ்வான் (பாண்பெருமாள்) என்னும் பெயர் பெற்றார். இவர் யாழ்ப்பாடலில் தேர்ச்சி பெற்றுத் திருவரங்கம் பெரியபெருமாள் திருவுள்ளம் உவக்குமாறு பாடல் தொண்டு புரிந்து வந்தார். அதனால் அவர் தம் இன்னருளுக்கு இலக்காகி, அவர் பணித்தருளியபடி லோகசாரங்கமாமுனிகளின் தோள்களின் மேலே ஏறி, அப்பெரிய பெருமாளின் திருக்கோயிலுக்குள் சென்று, அவரைத் திருவடி முதல் திருமுடி வரை தனித்தனியாகவும் ஒரு சேரவும் தரிசித்து நன்கு அனுபவித்து, என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே என்று நெஞ்சுருகப் பாடி, அவர்தம் திருவடிகளையே சார்ந்தவர். ''அமலன் ஆதிபிரான்'' என்பது, இவர் அருளிய திவ்வியப் பிரபந்தமாகும்.

அமலன் அதிபிரான் அடியார்க் கென்னை யாட்படுத்த
விமலன், விண்ணவர் கோன்விரை யார்பொழில் வேங்
கடவன்,
நிமலன் நின்மலன் நீதி வானவன் நீள்மதி ளரங்கத்
தம்மான், திருக்
கமலபாதம்வந் தென்கண்ணி னுள்ளன வொக்கின்றதே. 44.

மதுரகவியாழ்வார்

பாண்டிய நாட்டு, ஆழ்வார்திருநகரிக்கு அருகிலுள்ள திருக்கோளூர் என்னும் திவ்வியதேசத்தில், சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில், கணநாதரான குமுதர் என்பவரின் அம்சமாகத் திருவவதாரம் செய்தவர். சூரியோதயத்திற்கு முன்னர் நிகழும் அருணோதயம்போன்று, நம்

மாழ்வார் திருவவதாரம் செய்வதற்கு முன்பே, இவர் தோன்றியருளினர். இளமையிலேயே வேதம் முதலிய நூல்களையெல்லாம் ஓதி உணர்ந்து மதுரம் மிகுந்த இனிய சிறந்த கவிகளைப் பாட வல்லவராக இருந்ததினால், இவருக்கு **மதுர கவிகள்** என்னும் பெயர் வாய்ப்பதாயிற்று. இவர் ''தேவு மற்றறியேன் குருகூர்நம்பி பாவின் இன்னிசை பாடித் திரிவனே'' என்று நம்மாழ்வாரையே குருவாகக் கொண்டு வாழ்ந்து உய்ந்தவர். ''நண்ணித் தென் குருகூர் நம்பி என்றக்கால், அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே'' என்று, நம்மாழ்வாரையே புகழ்ந்து, இவர் பாடியருளிய பிரபந்தம் ''**கண்ணிநுண்சிறுத்தாம்பு**'' என்னும் பிரபந்தமாகும். இது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் இடம் பெற்று நடுநாயகம் போல் சிறப்புற்று விளங்குகின்றது.

கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெரு மாயன், என்னப்பனில்,
நண்ணித் தென்குரு கூர்நம்பி யென்றக்கால்,
அண்ணிக் கும்அமு தூறும்என் நாவுக்கே. 45.

திருமங்கையாழ்வார்

சோழநாட்டில், திருவாலித் திருநகரி என்னும் திவ்விய தேசத்திற்கு மிக அருகிலுள்ள திருக்குறையலூரில் சோழ மன்னனின் படைத்தலைவனை ஒருவனுக்குக், கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில், திருமாலின் சார்ங்கம் என்னும் வில்லின் அம்சமாய் அவதரித்தார். '**நீலன்**' என்னும் இயற்பெயர் பெற்றிருந்த இவர், தமது குலத்திற்கேற்ப இளமையிலேயே படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற்று, சோழமன்னனை அடுத்துப் படைத் தலைவராய் அமர்ந்து, பகைவர்களைப் போரில் வென்று, **பரகாலன்** என்னும் சிறப்புப் பெற்றிருந்தார். இவர் குமுதவல்லி என்னும் அமரமகளை மணம் செய்து கொள்ள விரும்பி, அவளது வேண்டுகோளுக்கு இணங்கித் திருநறையூர் நம்பியிடம்

திருவிலச்சினை தரித்தவர். வயலாலி மணவாளனிடம் திருமந்திர உபதேசம் பெற்றவர். திருவரங்கம் கோயிலுக்குச் சிறந்தபல திருப்பணிகள் புரிந்தார். திருமங்கை என்னும் நாட்டுக்கு மன்னராக விளங்கியவராதலின், இவருக்குத் திருமங்கை மன்னன் என்றும், திருமங்கையாழ்வார் என்றும் பெயர்கள் வழங்கும், ஆலிநாடன்-அருள்மாரி-கலியன்-கலிகன்றி- நாலுகவிப்பெருமாள் முதலிய பெயர்களும் இவருக்கு உண்டு. இவர் பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் ஆறு பிரபந்தங்களை அருளிச் செய்துள்ளார். இவ் ஆறு பிரபந்தங்களும், நம்மாழ்வார் அருளிச் செய்த நான்கு வேதம் போன்ற நான்கு பிரபந்தங்களுக்கும், முறையே உரிய ஆறு அங்கங்களாக மதித்துப் போற்றப்படுகின்றன.

குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார்
படுதுய ராயின வெல்லாம்,
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்,
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்,
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம். 46.

ஏனோர் அஞ்ச வெஞ்சமத்துள்
அரியாய்ப் பரிய இரணியனை
ஊன் ஆர் அகலம் பிளவெடுத்த
ஒருவன் தானே இருசுடராய்
வானாய்த் தீயாய் மாருதமாய்
மலையாய் அலைநீர் உலகனைத்தும்
தானாய், தானும் ஆனான் தன்
சாளக்கிராமம் அடை நெஞ்சே. 47.

சொல்லுவன் சொற்பொருள் தானவை யாய்ச்சுவை
ஊறொலி நாற்றமும் தோற்றமுமாய்,
நல்லரன் நான்முகன் நாரண னுக்கிடந்
தான்தடஞ் சூழ்ந்தழ காயகச்சி,
பல்லவன் வில்லவ னென்றுல கில்பல
ராய்ப்பல வேந்தர் வணங்குகழல்
பல்லவன், மல்லையர் கோன்பணிந் தபர
மேச்சுர விண்ணகர மதுவே. 48

பண்டைநான் மறையும் வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்,
பிண்டமாய் விரித்த பிறங்கொளி யனலும்
பெருகிய புனலொடு நிலனும்,
கொண்டல்மா ருதமும் குரைகட லேழும்
ஏழுமா மலைகளும் விசும்பும்,
அண்டமும் தானாய் நின்றவெம் பெருமான்
அரங்கமா நகரமர்ந் தானே. 49

இந்திரன் பிரமன் ஈசனென் றிவர்கள்
எண்ணில்பல் குணங்களே யியற்றத்,
தந்தையும் தாயும் மக்களும் மிக்க
சுற்றமும் சுற்றிநின் றகலாப்
பந்தமும், பந்த மறுப்பதோர் மருந்தும்
பான்மையும் பல்லுயிர்க் கெல்லாம்,
அந்தமும் வாழ்வும் ஆயவெம் பெருமான்
அரங்கமா நகரமர்ந் தானே. 50

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னா
திரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து,
'மாழை மான்மட நோக்கியுன் தோழி;
உம்பி எம்பி' என் றொழிந்திலை, உகந்து,
'தோழன் நீயெனக் கிங்கொழி', என்ற
சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட,
ஆழி வண்ண! நின் அடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 51

கறவா மடநாகுதன் கன்றுள்ளி னாற்போல்,
மறவா தடியே னுன்னையே யழைக்கின்றேன்,
நறவார் பொழில்சூழ் நறையூர் நின்றநம்பி,
பிறவாமை யென்னைப்பணி யெந்தை பிரானே! 52.

தாய் நினைந்த கன்றே ஒக்க என்னையும்
தன்னையே நினைக்கச்செய்து, தான் எனக்
காய் நினைந்து அருள்செய்யும் அப்பனை
அன்று இவ்வையகம் உண்டு உமிழ்ந்திட்ட
வாயனை, மகரக் குழைக் காதனை
மைந்தனை மதிள் கோவல் இடைகழி
ஆயனை, அமரர்க்கு அரியேற்றை, என்
அன்பனை அன்றி ஆதரியேனே! 53.

உள்ளமோ ஒன்றில் நில்லாது
ஓசையி னெரிநின் றுண்ணும்
கொள்ளிமே லெறும்பு போலக்
குழையுமா லென்ற னுள்ளம்,
தெள்ளியீர்! தேவர்க் கெல்லாம்
தேவரா யுலகம் கொண்ட
ஒள்ளியீர், உம்மை யல்லால்
எழுமையும் துணையி லோமே. 54.

பொய்கையாழ்வார்

ஆழ்வார்கள் பன்னிருவருள், பொய்கையார், பூதத்தார், பேயார் என்னும் இம்மூவரும் முதலாழ்வார்கள் எனப்படுவர். பொய்கையார் காஞ்சிபுரத்தில், திருவெஃகா என்னும் திவ்விய தேசத்தில், பொற்றாமரைப் பொய்கையில், ஓர் அழகிய தாமரை மலரில், ஐப்பசித் திருவோண நாளில், திருமாலின் பாஞ்சசன்னியம் எனப் பெயர் பெற்ற சங்கின்கூறாக அவதரித்தருளினார். பொய்கையில் அவதரித்த தனால் இவருக்குப் பொய்கையார் எனப் பெயர் அமைந்தது. இவர் அருளிச் செய்த பிரபந்தம், முதற்றிருவந்தாதி எனப்படும்.

வையம் தகளியா வார்கடலே நெய்யாக,
வெய்ய கதிரோன் விளக்காக,-செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன்சொன் மாலை,
இடராழி நீங்குகவே என்று. 55.

எளிதாக வுள்ளத்தைச் செந்நிறீஇ, ஞானத்து
எளிவாக நன்குணர்வார் சிந்தை,-எளிதாகத்
தாய்நாடு கன்றேபோல் தண்டுழா யானடிக்கே,
போய்நாடிக் கொள்ளும் புரிந்து. 56.

குன்றனைய குற்றஞ் செயினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக என்னெஞ்சே,-என்றும்
புறனுரையே யாயினும் பொன்னாழிக் கையான்
திறனுரையே சிந்தித் திரு. 57.

மனமாசு தீரும் மறுவினையும் சாரா,
தனமாய தானேகை கூடும்,-புனமேய
பூந்துழா யானடிக்கே போதொடு நீரேந்தி,
தாம்தொழா நிற்பார் தமர். 58.

தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே,
தமருகந்தது எப்பேர்மற் றப்பேர்,-தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே,
அவ்வண்ணம் ஆழியா னாம். 59.

சென்றால் குடையாம் இருந்தால்சிங் காசனமாம்,
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்,-என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம், திருமாற் கரவு. 60.

அவன்தமர் எவ்வினைய ராகிலும், எங்கோன்
அவன்தமரே யென்றொழிவ தல்லால்,-நமன்தமரால்
ஆராயப் பட்டறியார் கண்டீர் அரவணைமேல்
பேராயற் காட்பட்டார் பேர். 61.

தொழுது மலர்கொண்டு தூபம்கை யேந்தி
எழுதும் எழுவாழி நெஞ்சே,-பழுதின்றி
மந்திரங்கள் கற்பனவும் மாலடியே கைதொழுவான்
அந்தரம் ஒன்றில்லை அடை. 62.

பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்,
நின்றுலகம் தாய நெடுமாலும், - என்றும்
இருவரங்கத் தால்திரிவ ரேலும், ஒருவன்
ஒருவனங்கத் தென்றும் உளன். 63.

பூதத்தாழ்வார்

தொண்டை நாட்டிலுள்ள திருக்கடல்மல்லை (மாமல்லபுரம்) என்னும் திவ்வியதேசத்தில், ஒரு குருக்கத்தி மலரில், திருமாலின் கௌமோதகி என்னும் கதாயுதத்தின் கூறாக, ஐப்பசி அவிட்ட நட்சத்திரத்தில் தோன்றியருளினார். இவர் இறைவனை அறிதலாலேயே தாம் உயிர் (பூதம்) உளராகும் தன்மையை உடையராய் இருந்தார். ஆதலால் இவருக்குப் பூதத்தார் என்று பெயர் அமைந்தது. இவர் திருவரங்கர் புகழ் பாடுதலில் மிகுதியான அன்புடையவர். இவர் பாடியருளியது இரண்டாம் திருவந்தாதி எனப்படும்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை யிடுதிரியா, - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு,
ஞானத் தமிழ்புரிந்த நான். 64.

அறிந்து ஐந்தும் உள்ளடக்கி ஆய்மலர்கொண்டு ஆர்வம்
செறிந்த மனத்தராய்ச் செவ்வே, - அறிந்து அவன்தன்
பேரோதி ஏத்தும் பெருந்தவத்தோர் காண்பரே
காரோத வண்ணன் கழல். 65.

அரியது எளிதாகும் ஆற்றலால் மாற்றிப்
பெருக முயல்வாரைப் பெற்றால், - கரியதோர்
வெண்கோட்டு மால்யானை வென்றுமுடித் தன்றே
தண்கோட்டு மாமலரால் தாழ்ந்து. 66.

யானே தவம்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான், - யானே
இருந்தமிழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்,
பெருந்தமிழன் நல்லேன் பெரிது. 67.

பேயாழ்வார்

இவர் சென்னையிலுள்ள திருமயிலை என்னும் திவ்விய தேசத்தில், ஒரு கிணற்றில் மலர்ந்த செவ்வல்லிப் பூவில், திருமாலின் நந்தகம் என்னும் வாளின்கூறாக, ஐப்பசியில் சதய நட்சத்திரத்தில் அவதரித்தார். ''பேயரே எனக்கு யாவரும்; யானும் ஓர் பேயனே எவர்க்கும்; இது பேசி என்? ஆயனே அரங்கனே என்று அழைக்கின்றேன்; பேய னாய் ஒழிந்தேன் எம் பிரானுக்கே'' என்று குலசேகரர் அருளிச் செய்தது போன்று, திருமாலின்பால் தாம் கொண்ட பேரன்பின் மிகுதியினால், காண்பவர்கள் 'இவர் பேய் பிடித் தவர் போலும்' என்னும்படி இருந்ததினால், இவருக்குப் பேயாழ்வார் எனப் பெயரமைந்தது.

.. பொய்கையார் பூதத்தார் பேயார் என்னும் இம்மூவ ரும், இராமன் பரதன் இலக்குமணன் என்னும் மூவரைப் போன்று அடுத்தடுத்த] நாட்களில் அவதரித்து, சுத்த சத் துவ குணமுடையவராய், ஒருநாள் இருந்த இடத்தில் மற் றொரு நாள் தங்காமல், ஓர் ஊரில் ஓர் இரவு மட்டும் தங்கி, தம்மில் ஒருவரை ஒருவர் அறியாமல் தனித்தனியே தலயாத்திரை செய்து கொண்டிருந்தனர். கருணைக் கட லாகிய திருமால் இவர்கள் மூவரையும் ஓரிடத்தில் சேர்த்து ஆட்கொண்டு, இம்மூவரால் உலகத்தை உய்விக்கத் திரு வுள்ளம் கொண்டு, மழை என்னும் ஒரு காரணத்தால், இம்மூவரையும் திருக்கோவலூரில் ஓர் இடைகழியில் ஒன்று சேரும்படி செய்தருளினார். அங்ஙனம் ஓர் இடைகழியில் ஒன்று சேர்ந்த இம்மூவரும், திருமாலின் திருவருள் நலங் களை வியந்து தமக்குள் சொல்லியும் கேட்டும் மகிழ்ந்திருந் தனர். அப்போது திருமால் தாமும் அங்குச் சென்று அம் மூவருடன் சேர்ந்து, அவர்களுக்குப் !பொறுக்கொணாத மிக்க நெருக்கத்தை உண்டாக்கினார். அப்போது இவர்கள் நம்மையொழியவும் இங்குப் போந்து புகுந்து, நம்மோடு நிற்பார் எவரேனும் பிறருண்டோ? என ஐயம் கொண்ட னர். அப்போது பொய்கையாழ்வார் ''வையம் தகளியா, வார் கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காக'' ஏற்றினார். பூதத்தாழ்வார் ''அன்பே தகழியா, ஆர்வமே

நெய்யாக. இன்புருகு சிந்தை இடுதிரியா, நன்புருகு ஞானச் சுடர் விளக்கு'' ஏற்றினார். அவ்விரு விளக்குகளையும் கொண்டு பேயாழ்வார், தம்மோடு உடன் கலந்து ஒன்றி நின்ற திருமாலைக் கண்கூடாகக் கண்டு அனுபவித்துக் களித்தார். ''திருக்கண்டேன்; பொன்மேனி கண்டேன்; திகழும் அருக்கன் அணிநிறமும் கண்டேன்; செருக்கிளரும்; பொன் னாழி கண்டேன்; புரிசங்கம் கைக் கண்டேன்; என் ஆழி வண்ணன்பால் இன்று'' என்று பாடி மகிழ்ந்தார். பேயாழ்வார் பாடிய பிரபந்தம் **மூன்றாம் திருவந்தாதி** எனப்படும்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன், திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன், -செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று. 68.

தேசும் திறலும் திருவும் உருவமும்,
மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும்-பேசில்
வலம்புரிந்த வான்சங்கம் கொண்டான்பேர் ஓத,
நலம்புரிந்து சென்றடையும் நன்கு. 69.

தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்,
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால், -சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு,
இரண்டுருவு மொன்றாய் இசைந்து. 70.

பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும், ஐந்து
நெருப்பிடையே நிற்கவும்நீர் வேண்டா, -விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர் தூய்க் கைதொழுதால்
அஃகாவே தீவினைகள் ஆய்ந்து. 71.

நம்மாழ்வார்

இவர் பாண்டிநாட்டில், தாமிரபரணி யாற்றின் கரையில், குருகூர் அல்லது (ஆழ்வார்திருநகரி) என்னும் திவ்விய தேசத்தில், திருமாலுக்கே தொண்டு பூண்டொழுகும் சிறப்பு வாய்ந்த வேளாண் குலத்தில், காரியார்க்கும் உடைய நங்கையார்க்கும், வைகாசி விசாகத்திருநாளில் திருக்குறுங்குடி நம்பியின் அருளால் விஷ்வக்சேனர் என்னும் சேனை முதலியாரின் அம்சமாகத் திருவவதரித்தார். உலகியல் வாழ்க்கையின் மயக்கமாகிய சடப்பொருள் உணர்ச்சி தம்மைப் பற்றாதவாறு கோபித்து ஓட்டி ஒழித்தவர் ஆகலால், இவருக்குச் **சடகோபன்** என்னும் திருப்பெயர் ஏற்பட்டது. இவர் திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள நம்பெருமாளால் "நம் ஆழ்வார்" என்று உறவு கொண்டாடிப் பெரிதும் விரும்பிப் போற்றப்பெற்றவர் ஆதலால், இவருக்கு **நம்மாழ்வார்** என்றும் பெயர் வழங்கும். இவர் தம் இயல்பு உலகநடைக்கு மாறாக இருந்ததனால், **மாறன்** என்னும் காரணச் சிறப்புப் பெயரால் பெரியோர்கள் இவரைக் குறிப்பிடுவர். காரிமாறன், வகுளாபரணன், பராங்குசன், குருகைப்பிரான் முதலிய பெயர்களும் இவருக்கு உண்டு.

இலக்குமணன் அவதரிக்கும்போதே இராமபிரானிடம் பேரன்பு பெற்றிருந்ததுபோன்று, இவரும் அவதரிக்கும் போதே திருமாலிடம் பேரன்பு கொண்டு திகழ்ந்தவர். ஆதலால் இவரது பக்தியைச் சகச பக்தி என்று பெரியோர்கள் புகழ்ந்து பேசுவர். இவர் இடையறாது எம்பெருமானை எப்போதும் அனுபவித்து வாழ்ந்தவர். கண்ணபிரானிடம் அளவற்ற அன்பு பூண்டவர். ஏனைய ஆழ்வார்கள் எல்லாம் தமக்கு உறுப்பாக அமைய இவர் உறுப்பியாகி அவர்களுக்கெல்லாம் புதுமையும் முதன்மையும் கண்டு திகழ்ந்தவர். திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி திருவாய்மொழி என்னும் நான்கு பிரபந்தங்கள் இவரால் அருளிச் செய்யப் பெற்றன.

பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும்
அழுக்குடம்பும்,
இந்நின்ற நீர்மை இனியா முறுமை, -உயிரளிப்பான்
எந்நின்ற யோனியு மாய்ப்பிறந் தாயிமை யோர்தலைவா!
மெய்ந்நின்று கேட்டரு ளாய், அடியேன்செய்யும்
விண்ணப்பமே. 72.

சூட்டு நன்மாலைகள் தூயன ஏந்தி, விண்ணோர்கள் நன்னீர்
ஆட்டி அந்தூபம் தராநிற்கவே அங்கு ஓர் மாயையினல்
சட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்திமிலேற்று
வன்கூன்
கோட்டிடையாடினை, கூத்து. அடல்ஆயர் தம்கொம்பினுக்கே.

மாணிக்கங் கொண்டு குரங்கெறி ஒத்து இருளோடு முட்டி
ஆணிப்பொன் அன்ன சுடர்படு மாலை உலகளந்த
மாணிக்கமே! என்மர கதமே! மற்று ஒப்பாரையில்லா
ஆணிப்பொன்னே! அடியேனுடை ஆவி அடைக்கலமே! 74

வணங்கும் துறைகள் பலபல ஆக்கி, மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல ஆக்கி, அவையவைதோ
றணங்கும் பல்பல ஆக்கிநின் மூர்த்தி பரப்பிவைத்தாய்
இணங்குநின் னோரையில் லாய், நின்கண் வேட்கை
எழுவிப்பனே. 75.

ஒன்றுண்டு செங்கண்மால் யானுரைப்பது, உன் அடியார்க்கு
என்செய்வன் என்றே இருத்திநீ -நின்புகழில்
வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ நீயவர்க்கு
வைகுந்தம் என்றருளும் வான்? 76.

புவியும் இருவிசும்பும் நின்னகத்த, நீயென்
செவியின் வழிபுகுந்தென் னுள்ளாய், -அவிவின்றி
யான்பெரியன் நீபெரியை என்பதனை யாரறிவார்,
ஊன்பருகு நேமியாய்! உள்ளு. 77.

உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்,
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்,
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்,
துயரறு சுடரடி தொழுதெழுஎன் மனனே. 78.

திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை,
படர்பொருள் முழுவது மாயவை யவைதொறும்,
உடல்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்,
சுடர்மிகு சுருதியு ளிவையுண்ட சுரனே. 79.

பத்துடை யடியவர்க் கெளியவன், பிறர்களுக் கரிய
வித்தகன், மலர்மகள் விரும்பும்நம் அரும்பெறல் அடிகள்,
மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரவிடை யாப்புண்டு
எத்திறம் உரலினோ டிணைந்திருந் தேங்கிய எளிவே! 80.

யான்ஒட்டி என்னுள் இருத்துவம் என்றிலன்
தான்ஒட்டி வந்து என் தனிநெஞ்சை வஞ்சித்து
ஊன்ஒட்டி நின்று என் உயிரிற் கலந்து, இயல்
வான் ஒட்டுமோ! இனி என்னை நெகிழ்விக்கவே. 81.

நாவினுள் நின்று மலரும்
ஞானக் கலைகளுக் கெல்லாம்
ஆவியும் ஆக்கையும் தானே
அழிப்போ டளிப்பவன் தானே,
பூவியல் நால்தடந் தோளன்
பொருபடை யாழிசங் கேந்தும்,
காவிநன் மேனிக் கமலக்
கண்ணனென் கண்ணினு ளானே. 82.

நீயும் நானும் இந்நேர்நிற்கில், மேல்மற்றோர்
நோயும் சார்கொடான் நெஞ்சமே சொன்னேன்
தாயும் தந்தையுமாய் இவ்வுலகினில்
வாயும் ஈசன் மணிவண்ணன் எந்தையே. 83.

ஊனில் வாழ் உயிரே! நல்லைபோ உன்னைப் பெற்று
வானுளார் பெருமான் மதுசூதன் என் அம்மான்
தானும் யானும் எல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்
தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்தே. 84.

எனது ஆவியுள் கலந்த பெரு நல்லுதவிக் கைம்மாறு
எனதாவி தந்தொழிந்தேன் இனி மீள்வது என்பதுண்டே
எனதாவி யாவியும் நீ பொழில் ஏழும் உண்ட எந்தாய்
எனது ஆவியார்? யான்ஆர்? தந்த நீகொண்டாக்கினையே 85

ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்
காணலும் ஆகான் உளன்அல்லன் இல்லையல்லன்
பேணுங்கால் பேணும் உருவாகும் அல்லனும் ஆம்
கோனை பெரிதுடைத்து எம் பெம்மானைக் கூறுதலே. 86.

'எங்கும் உளன்கண்ணன்' என்றமக னைக்காய்ந்து,
'இங்கில்லை யால்' என் றிரணியன் தூண்புடைப்ப,
அங்கப் பொழுதே அவன்வீயத் தோன்றிய, என்
சிங்கப் பிரான்பெருமை யாராயும் சீர்மைத்தே? 87.

யானே என்னை அறியகி லாதே,
யானே என்றன தேஎன் றிருந்தேன்,
யானே நீயென் உடைமையும் நீயே,
வானே ஏத்துமெம் வானவ ரேறே. 88.

ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி,
வழுவிலா அடிமை செய்ய வேண்டும்நாம்,
தெழிகு ரல்அரு வித்திரு வேங்கடத்து,
எழில்கொள் சோதி எந்தைதந்தை தந்தைக்கே. 89.

அச்சுதன் அமலன் என்கோ!
அடியவர் வினை கெடுக்கும்
நச்சுமா மருந்தம் என்கோ!
நலங்கடல் அமுதம் என்கோ!
அச்சுவைக் கட்டி என்கோ!
அறுசுவை அடிசில் என்கோ!
நெய்ச்சுவைத் தேறல் என்கோ!
கனியென்கோ! பால் என்கேனோ! 90.

யாவையும் எவரும் தானாய்
அவரவர் சமயந் தோறும்,
தோய்விலன் புலனைந் துக்கும்
சொலப்படான் உணர்வின் மூர்த்தி,
ஆவிசேர் உயிரின் உள்ளால்
ஆதுமோர் பற்றி லாத,
பாவனை அதனைக் கூடில்
அவனையும் கூட லாமே. 91.

செய்ய தாமரைக் கண்ணனாய் உலகு
எழும் உண்ட அவன் கண்டீர்
வையம் வானம் மனிசர் தெய்வம்
மற்றும் மற்றும் முற்றுமாய்
செய்ய சூழ் சுடர் ஞானமாய் வெளிப்பட்டு
இவை படைத்தான் பின்னும்
மொய்கொள் சோதியொடு ஆயினன் ஒரு
மூவராகிய மூர்த்தியே. 92.

பயிலும் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக் கண்ணனை
பயில இனியநம் பாற்கடல் சேர்ந்த பரமனை,
பயிலும் திருவுடை யார்யவ ரேலும் அவர்கண்டீர்,
பயிலும் பிறப்பிடை தோறெம்மை யாளும் பரமரே. 93.

வம்மின் புலவீர்! நும் மெய்வருத் திக்கைசெய் துய்ம்மினோ,
இம்மன் னுலகில் செல்வரிப் போதில்லை நோக்கினோம்
நும்மின் கவிகொண்டு நும்நுமிட் டாதெய்வம் ஏத்தினல்,
செம்மின் சுடர்முடி என்திரு மாலுக்குச் சேருமே. 94.

வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேன அல்லேன்
ஆய்கொண்ட சீர்வள்ளல் ஆழிப்பிரான் எனக்கேயுளன்
சாய்கொண்ட இம்மையும் சாதித்து வானவர் நாட்டையும்
நீகண்டுகொள் என்று வீடும் தரும் நின்று நின்றே. 95.

வாழ்ந்தார்கள் வாழ்ந்தது மாமழை மொக்குளில் மாய்ந்து மாய்ந்து
ஆழ்ந்தார் என்றல்லால் அன்றுமுதல் இன்று அறுதியா
வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் என்பதில்லை நிற்குறில்
ஆழ்ந்தார் கடல்பள்ளி அண்ணல் அடியவர் ஆமினோ. 96.

பொலிக பொலிக பொலிக!
போயிற்று வல்லுயிர்ச் சாபம்,
நலியும் நரகமும் நைந்து
நமனுக்கிங் கியாதொன்று மில்லை,
கலியும் கெடும்கண்டு கொள்மின்
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்திசை பாடி
யாடி யுழிதரக் கண்டோம். 97.

கண்டோம் கண்டோம் கண்டோம்
கண்ணுக் கினியன கண்டோம்,
தொண்டீர்! எல்லீரும் வாரீர்
தொழுது தொழுதுநின் றார்த்தும்,
வண்டார் தண்ணந்து ழாயான்
மாதவன் பூதங்கள் மண்மேல்,
பண்டான் பாடிநின் றாடிப்
பரந்து திரிகின் றனவே. 98.

ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம்,
பாவி யேனைப் பலநீ காட்டிப் படுப்பாயோ,
தாவி வையம் கொண்ட தடந்தா மரைகட்கே,
கூவிக் கொள்ளும் கால மின்னம் குறுகாதோ? 99.

கற்பார் இராம பிரானையல் லால்மற்றும் கற்பரோ?
புற்பா முதலாப் புல்லெறும் பாதியொன் றின்றியே,
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்,
நற்பா லுக்குய்த்தனன் நான்முக ஞர்பெற்ற நாட்டுளே. 100

அருள்பெறுவார் அடியார்தம் அடியனேற்கு, ஆழியான்
அருள்தருவான் அமைகின்றான் அதுநமது விதிவகையே,
இருள்தருமா ஞாலத்துள் இனிப்பிறவி யான்வேண்டேன்,
மருளொழிநீ மடநெஞ்சே! வாட்டாற்றான் அடிவணங்கே 101

முனியே! நான்முக னே! முக்கண் ணப்பா, என் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக் கட்கரு மாணிக்கமே! என்கள்வா,
தனியேன் ஆருயிரே! என்தலை மிசையாய் வந்திட்டு,
இனிநான் போகலொட் டேன்ஒன்றும் மாயம்செய்
யேலென்னையே. 102.

அவாவறச் சூழ்அரியை அயனை அரனை அலற்றி,
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன,
அவாவிலந் தாதிகளால் இவையா யிரமும், முடிந்த
அவாவிலந் தாதியிப் பத்தறிந் தார்பிறந் தார்
உயர்ந்தே. 103.

இராமானுச நூற்றந்தாதி

இன்புற்ற சீலத் திராமா னுச, என்றும் எவ்விடத்தும்
என்புற்ற நோயுடல் தோறும் பிறந்திறந்து, எண்ணரிய
துன்புற்று வீயினும் சொல்லுவ தொன்றுண்டுன்
தொண்டர்கட்கே
அன்புற் றிருக்கும் படி, என்னை யாக்கியங் காட்படுத்தே. 104

திருத்தம்

நால்வர் அருளிச் செய்த நற்றமிழ் மாமறையின் திருப்பாடல்களை மெய்யன்பர்கள் ஓதுங்கால் முதற்கண் ''திருச்சிற்றம்பலம்'' என ஓதுதல் வேண்டும். அது போன்றே பதிகத்தின் முடிவின் கண்ணும் ''திருச்சிற்றம்பலம்'' ஓதுதல் வேண்டும்.

திருஞான சம்பந்தர் தேவாரத்தில் காணப்படும் எண் 18. ''சலமிவன்'' 21. சமரசூரபன் 22. திருந்தலார் புரம்'' எனத் தொடங்கும் திருப்பாடல்கள் மூன்றும் 28ஆம் பக்கத்தில் திருநாவுக்கரசர் தேவாரத்தோடு சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

பாரி அச்சகம், 127, பிராட்வே, சென்னை-1.